Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 04 வெள்ளிக்கிழமை (17.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 108

11



மீள் இணக்கம்

13



சிறைகள் உடையட்டும்

# யாழ். வருகிறார் ஜனாதிபதி மகிந்த மருத்துவமனையை திறந்து வைப்பார்



(யாழ்ப்பாணம்)

இந்நாட்டுக் குடிமக்களின் நிதியில் உருவாக்கப்பட்ட முதலாவது புற்றுநோய் வைத்திய சாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கவுள்ளார்.

'கரேளர்ஸ் ஒவ் கவரேஜ்' நிதியத்தினால் கால்நடையாகச் சேகரிக்கப்பட்ட நிதி மூலம் இவ் வைத்தியசாலை உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்படுவது தொடர்பாக நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே

(19) பக்கம் பார்க்க...

## புற்றுநோயின் தாக்கம் யாழ்.குடாவில் அதிகரிப்பு



(யாழ்ப்பாணம்)

காய்கறிச் செய்கைக்கான செயற்கை உரப்பாவனை, அதிகரித்த கிருமிநாசினிப் பாவனை மற்றும் நிலத்தடி நீர் மாசடைவதினாலும் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயின் தாக்கம் வெகுவாக அதிகரித்திருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள

(19) பக்கம் பார்க்க...

# கொழும்புடன் ஒத்துழைக்க விரும்புகிறது அமெரிக்கா



## மனித உரிமைகளை பாதுகாக்க

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆவலாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மாரி ஹாப் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கை விடயத்தில் அமெரிக்கா தமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது அதற்கு பதிலளித்த அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்

(19) பக்கம் பார்க்க...

## சாட்சியங்களை பகிர்ந்துகொள்ள அமெரிக்கா தயாராக இல்லை

### கோரிக்கையும் நிராகரிப்பு

(வொஷிங்டன்)


வடக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் அமெரிக்கா திரட்டிய தகவல்களையும், சாட்சியங்களையும் கொழும்புடன் பகிர்ந்து கொள்வதற்கு அமெரிக்கா தயாராக இல்லை என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஜூலியானா ஏ ஸ்பவன் தெரிவித்தார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா திரட்டிய சாட்சியங்களைத் தம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையையும் அவர் நிராகரித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் பணியகத்தில் போர்க் குற்ற விவகாரங்களைக் கவனிக்கும் சிறப்பு தூதுவர் ஸ்டீபன் ஜே ராப் திரட்டிய தகவல்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை என்று அமெரிக்கத் தூதரக பேச்சாளர

(19) பக்கம் பார்க்க...

## மின் பாவனையாளர்கள் சேவை நிலையம் பருத்தித்துறையில் நேற்று திறப்பு



(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின்பாவனையாளர் சேவை நிலையம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி வீதி பருத்தித்துறையில் எரிசக்தி மற்றும் மின்வலு அமைச்சின் நிதிப்பங்களிப்புடன், நிர்மாணிக்கப்பட்ட இந்நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்பதாக பிரதான வீதியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரும், பொறியியலாளருமான யு.கே.டபிள்யு சில்வா, வடமாகாண பிரதிப் பொது முகாமையாளரும், மின் பொறியியலாளருமான குணதிலக, வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன் உள்ளிட்ட அதிதிகள் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியும், இலங்கை மின்சார சபையினது கொடியும் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நினைவுக்

(19) பக்கம் பார்க்க...

## இந்திய - இலங்கை மீனவர்கள் நடுக்கடலில் பரஸ்பர பரிமாற்றம்

(கொழும்பு)

எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் மொத்தம் 105 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர். இவர்கள் பரஸ்பரம் இரு நாட்டு கடற்படையினரிடமும் பரிமாறிக் கொள்ளப்பட்டனர்.

இருநாட்டு கடல் எல்லையில் வைத்தே இந்த மீனவர்கள் பரிமாறப்பட்டிருக்கின்றனர்.

(19) பக்கம் பார்க்க...

## சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அமெரிக்காவின் நிதி உதவி



### சட்ட ஆட்சியை வலுப்படுத்த திட்டம்

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அதன் அபிவிருத்திக்கரமான சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பின் (யு.எஸ். எயிட்) ஊடாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உதவும் வகையில் புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிவித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதனூடாக சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்முயற்சியில் மேற்கொள்ளப்படும் சட்டத்தின் ஆட்சிக்கு ஆதரவளிப்

(19) பக்கம் பார்க்க...

## நேற்றும் எலும்புக்கூடுகள் மீட்பு

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் மாவட்டம், திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி ஏழாவது தடவையாக மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை தோண்டப்பட்ட போது மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்தப் புதைகுழியில்

(19) பக்கம் பார்க்க...

# குழந்தைகளுக்கு அதிதீவிர சிகிச்சை; யாழ்.போதனாவில் புதிதாகத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கான அதிதீவிர கிசிச்சைப் பிரிவு ஒன்று நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்று மில்லியன் ரூபா செலவில் இந்தப்பிரிவிற்கு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச வைத்திய சுகாதார நிறுவனம் (ஐ.எம்.எச்.ஓ) உபகரணங்களை வழங்கிவைத்துள்ளதுடன், புலம்பெயர் தமிழ் வைத்தியர் வி.முருகையா குடும்பத்தினர் இந்தப்பிரிவை ஆரம்பித்துவைத்துள்ளனர்.



இதனைத்தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இது குறித்த நிகழ்வொன்று நடைபெற்று இந் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசா, பிரதிப்பணிப்பாளர் சிறிபவானந்தராசா, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கையைச் சேர்ந்த புலம் பெயர் வைத்தியர் வி.முருகையாவிற்கு யாழ்.போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசா நினைவுப் பரிசு ஒன்றை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்த வி.முருகையா, தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஒரு முக்கியமான சேவை. எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டிய சேவை. அது வெளிநாட்டு வசதி வாய்ப்புக்களைப் பெற்று செய்யவேண்டியசேவை. நான் பிறநத நாட்டிற்கு என்னால் ஆன உதவியைச் செய்துள்ள திருப்தி ஏற்பட்டுள்ளது என்றார். (பா)

# உழவர் பெருவிழா

(கிளிநொச்சி)

வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் உழவர் பெருவிழா நாளை சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கால்நடை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் வட மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட பேராசிரியர் கு.மிகுந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றம் வடமாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் தமிழகக் கவிஞர் யுகபாரதி தலைமையில் கவியரங்கமும், கலைமாணி குலபூஷணி கல்யாணராமன் வழங்கும் இசைப்பாடலும் நடைபெறவுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களும், பாற்பண்ணையாளர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (கி)

# யாழ்.மீடியா கிளப் நாளை திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீடியா கிளப் பிறைவட் லிமிட்டட் நிறுவனத்தின் யாழ். மீடியா கிளப் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இல. 6, கோயில் வீதி யாழ்ப்பாணம். என்ற முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இக்கிளப்பை சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்துவைக்கவுள்ளார்.

அத்துடன் இக்கிளப்பில் ஊடகவியலாளர் மாநாட்டு மண்டபம், தங்கும் அறைகள், உணவுச் சாலைகள், யாழ்ப்பாணத்தை சர்வதேசத்துடன் இணைக்கும் வசதிகள், உடற்பயிற்சிக்கூடம் என்பன அமையப்பெற்றுள்ளது. (ர)

# சிறைச்சாலை அலுவலர்களால் முனிஸ்வரர் ஆலயத்தில் பூசைவழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நடாத்தப படவுள்ள உருத்திரா அபிஷேகமும் விசேட பூசை நிகழ்வும் நாளை தைப்பூச தினத்தன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம கோட்டை முனீஸவரர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

அபிஷேக பூசை நிகழ்வுகளினைத்தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி. பெரேரா பிரதான யெயிலர் சீ.இந்திரகுமார் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். இப் பூசை நிகழ்வில் அடியவர்களினை கலந்து கொண்டு முனீஸ்வரனின் அருளை பெற்று கொள்ளுமாறு யாழ். சிறைச்சாலை சமூகத்தினர் அறிவித்துள்ளார்கள். (63)



**வேலணைப் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களது நிதியில் இருந்து சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கு நேற்றைய தினம் பிரதேச செயலகத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமையைக்காணலாம். (21)**

# கண்டாவளையில் கைவிடப்பட்ட ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்தில் 1000 ஏக்கர் நெற்செய்கை மழையின்மையால் விவசாயிகளினால் கைவிடப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேசத்தின் வெளிக்கண்டல் உள்ளிட்ட கிராமங்களில் மானாவாரி செய்கையே விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டது. எனினும் காலநிலை சீர்கேட்டினால் பருவமழை பெய்யாததையடுத்து 1000 ஏக்கர் நெற்செய்கை கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதைவிட கோரக்கன்கட்டு, பரந்தன், உமையாள்புரம் ஆகிய கிராமங்களிலும் மானாவாரி நெற்செய்கை கைவிடப்பட்டுள்ளதாகவும், மொத்தமாக 70 வீதமான நெற்செய்கை கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கே)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2496 திகதி 15-01-2014

ஆங்கில எழுத்து: Q

வெற்றி எண்கள்: 45 49 67 70

போனஸ் இல: 65

ஜக்பொட் பரிசு ரூ.10,625,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 147197 | 20/- | 2,943,940/- |
| 2 இல | 10528 | 100/- | 1,052,800/- |
| 3 இல | 223 | 1,000/- | 223,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6092 | 40/- | 243,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 427 | 1,000/- | 427,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,625,200/- | - |
| 1 இல + போனஸ் இல | 6966 | 100/- | 696,600/- |
| 2 இல + போனஸ் இல | 324 | 500/- | 162,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 381 | 200/- | 76,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 172164 | | 7,307,720/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.01.18 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 11,027,050/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3266)


# காவலரண் அகற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப்பகுதியில் ஊர்காவற்றுறை வீதியில் அமைந்திருந்த இராணுவக்காவலரண் நேற்று காலை முதல் இராணுவத்தினரினால் அகற்றப்பட்டு வருகிறது.

பைக்கோ கனரக இயந்திரம் மூலமாக இந்தக் காவலரண் இடித்து அகற்றப் பட்டுவருகின்றது.

தீவுப்பகுதிக்கான நுழைவாயலில் நீண்டகாலமாக இந்தக் காவலரண் அமைக்கப்பட்டு இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கல்லூரி முதல்வர் ரி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பாடசாலை அமைந்துள்ள ஊரியான் 2 ஆம் யுனிட் வீதிக்கு கல்லூரி வீதி என பெயர் சூட்டும் நிகழ்வும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. (கே)

# “லலிதாகலாவேதி” டிப்ளோமா கோரப்படுகிறது விண்ணப்பம்

இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட காரியாலயம் நடாத்தும் இசை மற்றும் நடனத்துறைக்கான ‘லலிதாகலாவேதி’ டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.


இதன் கீழ் கர்நாடகசங்கீதம், மற்றும் பரதநாட்டியம் பயிற்சி நெறிகளுக்கு விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

இதற்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும். வகுப்புகள் வார இறுதி நாட்களில் இடம்பெறும்.

விண்ணப்பதாரிகள் ‘நுண்கலைமாணி’/‘லலிதாகலாவேதி’ பட்டம் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் ‘லலிதாகலாவேதி’ கற்கை நெறிக்கு ஆசிரியராக விரும்புபவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது கடித மூலமோ ‘தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டக் காரியாலயம்’, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன் கேட்டுள்ளார். (48)

# அமைப்புகளினால் வழங்கப்படும் உதவிகளை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்

## உலக உணவுத்திட்ட ஓய்வுநிலை அதிகாரி



(கைதடி)

எமது மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென்று நல்ல நோக்கத்துடன் வழங்கும் இந்த உதவிகளை மாணவர்கள் சரிவரப்பயன் படுத்திக் கொள்ள வேண்டும். என உலக உணவுத்திட்டத்தின் ஓய்வு நிலை அதிகாரி க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.கைதடியிலுள்ள வறிய மாணவர்களில் 14 பேருக்கு டென்மார்க் நாட்டிலுள்ள கைதடி மக்களின் 2 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் 14 துவிச்சக்கர வண்டிகள் பொங்கல் தினத்தன்று வழங்கப்பட்டன.

யாழ்கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி தெற்கு சன சமூக நிலைய கலை அரங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

எமது மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமாயின் மாணவர்கள் தமக்கு வழங்கப்படுகின்ற இந்த உதவிகளை சரியாகப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன், கல்வியில் சிறப்பான பெறுபேறுகளை அடைவது தான் இந்த உதவிகளை வழங்கிய நன்கொடையாளர்களின் நல்ல நோக்கத்திற்கு செய்யும் கைமாறாகும்.

புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் எம்மவர்கள் தரும் ஆதரவு மிகவும் வரவேற்கத் தக்கது. அத்துடன், சமூகத்தில் வளப்பற்றாக்குறையுள்ள பல விடயங்களுக்கு இந்த நிதி பெரும் துணை புரிகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பண்டாரவளை கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான ஜெ.சிற்சபாநாதன், திருமதி ஜானகி இராசேந்திரம், யாழ். நகர் துசா மூக்குக்கண்ணாடி வியாபார நிலைய உரிமையாளர் து.மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(51)

# சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில் இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஐந்தாவது தடவையாக இன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

உள்ளூர், வெளிநாட்டு கம்பனிகள் மற்றும் நிறுவனங்களின் சுமார் 250 காட்சியறைகள் கொண்டதாக இந்தக் கண்காட்சி அமையவுள்ளதுடன் பொருள் விற்பனையும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தக் கண்காட்சி குறித்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள யாழ்.வர்த்தக தொழில்துறை மன்றத்தில் அதன் துணைத் தலைவர் ஏ.விக்கி னேஸ் தலைமையில் நடைபெற்றது 17ஆம், 18ஆம் திகதிகள் தொடர்ந்து நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியின் ஆரம்பநிகழ்வு இன்று 9 மணிக்கு யாழ்.நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதுடன் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வர்த்தகைத்தொழில் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இம்முறை இந்தக் கண்காட்சியினை சுமார் 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையானவர்கள் பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இந்தக் கண்காட்சியில் 30 கண்காட்சிக் கூடங்கள் உள்ளூர் நிறுவனங்களுக்கு அதாவது யாழ்.மாவட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தக் கண்காட்சியினைப் பார்வையிட வருவோர் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை பார்வையிட முடியும். அத்துடன் இசை நிகழ்ச்சியும் இந்தக் கண்காட்சியில் நடைபெறவுள்ளது.

(பா)

# இளைஞர்கழகத்தின் நிர்வாகத்தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. 2014ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக ஜே/145 வடலியடைப்பு இளைஞர் கழகத்தின் புனரமைப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஜே/145 கிராமசேவகர் கே.சுதர்சன், பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவரும் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.நவசக்தியா, ஆனைக்கோட்டை இளைஞர் கழக தலைவர் டீ.எப்எக்ஸ்.கூரே, கிராம மட்டத் தலைவர் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய ஆண்டிற்கான இளைஞர் கழகத்திற்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. புதிய ஆண்டுக்கான தலைவராக டீ.லோஜனன், செயலாளராக எல்.கபிலேஷன், பொருளாளராக எஸ்.அனுஷன், அமைப்பாளராக கே.துவாரகன், உபதலைவராக பி.குகதர்ஷன், உப செயலாளராக எஸ்.குணாளன் ஆகியோர் தெரிவானார்கள். அத்துடன் ஏனைய துறைக்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(48)

# தொகுக்கின் விரியும் காணாமற் போனோர் பட்டியல்கள்...




காணாமற்போனவர்களைப் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழு வடபகுதிக்கு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு நல்ல விடயம்.

ஆனால், இந்த விசாரணை நேர்மையாக – உண்மையானதாக நடக்க வேண்டும்.

அதேவேளை இதைப்பற்றிய தெளிவும் விளக்கமும் வேண்டும்.

காணாமற்போனவர்கள் என்றால், எப்பொழுதிருந்து காணாமற் போனவர்கள்? எங்கெல்லாம் இருந்து காணாமற் போனவர்கள்? யாரால் காணாமற்போனவர்கள்? எதற்காகக் காணாமற்போனவர்கள்? என்ற விளக்கங்கள் தேவை.

ஏனென்றால், இலங்கை அரசியலில் கடந்த முப்பது ஆண்டுகளாகக் காணாமற்போனோர் இருக்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் இந்தக் காணாமற்போகடிக்கப்படும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

பல தரப்பினரால், காணாமற் போனவர்களின் பிரச்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

எதுவாக இருந்தாலும் யார் மூலமாக இருந்தாலும் காணாமற்போகும் நிலை என்பது கொடுமையான ஒன்றே. காணாமற்போனவர்களைத் தேடும் உறவு–களின் நிலை மிகமிகக் கொடியதே.

ஆகவேதான் இது எரியும் பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. தீராப்பிரச்சினைகளில் முக்கியமானதாக உள்ளது. கண்ணீருடன் வாழும் மனிதர்களின் உயிர்ப்பிரச்சினை எனத் தொடர்கிறது. பிறருடைய இதயத்தை உருக்கும் விவகாரமாக உள்ளது.

என்பதால்தான் இதற்கு – இந்தப் பிரச்சினைக்கு சர்வதேச அளவில் கவனம் ஏற்படுகிறது.

ஆகவே இந்தத் தலைப் பிரச்சினைக்கு ஒரு கண்ணியமான தீர்வு தேவை. முறையான நடவடிக்கை அவசியம்.

இதையே ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள். ஏன் இதை உலகமே எதிர்பார்க்கிறது.

என்பதால். இந்தப்பிரச்சினையைக் கையிலெடுத்திருப்போர் இதற்கு ஒரு நீதியான தீர்ப்பைத் தரவேண்டும். உண்மையைக் கண்டறிய வேண்டும்.

ஆனால், அது சாத்தியமாகுமா? அதாவது அப்படியான ஒரு அதிசயம் நடக்குமா? என்று இலங்கை அரசியல் வரலாற்றின் குணம் அறிந்தோர் கேட்கிறார்கள்.

ஏனென்றால், இது இன்றைய இலங்கையின் அரசியற் சூழலில் மிகச் சவாலான ஒரு காரியம்.

காணாமற்போனோரைக் கண்டறிய வேண்டும் என்றால், தோண்டத்தோண்ட இருளும் முடிவற்ற ஆழமும் தென்படுவதைப்போல இது ஒரு மாயப்பிரச்சினையாக உள்ளது.

இயக்கங்களின் காலத்தில் காணாமற்போனவர்கள், இயக்க மோதல்களால் காணாமற்போனவர்கள், இந்தியாவுக்கான கடற்பயணத்தில் காணாமற்போனவர்கள், அரசாங்கத்தரப்பினால் கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு அல்லது அரசாங்கத்தரப்பிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள் எனப் பெரும் பட்டியல் உண்டு.

இதைவிட இறுதி யுத்தத்தின் போது காணாமற்போனவர்கள் என்றொரு பேரட்டவணையும் உள்ளது.

இவையெல்லாவற்றையும் எப்படிக் கண்டறிவது?

இந்தப் பேரவலத்திற்கு எப்படி முடிவு காண்பது?

இதற்கு முறையான ஒரு திட்டத்தை வரைந்து கொண்டா காணாமற் போனோரைப்பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழு தன்னுடைய வேலையைத் தொடங்கியிருக்கிறது?

கிடைக்கின்ற தகவல்களைப் பார்க்கும்போதும் நடந்து வருகின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போதும் அப்படியான பச்சை விளக்குகள் ஏதும் எரிவதாகத் தெரியவில்லை.

இது ஏதோ அவசரமாக வைக்கும் ஒரு சாம்பார் போலத்தான் தோன்றுகிறது. அல்லது அப்படியொரு சந்தேகம் வருகிறது.

வரவுள்ள 'ஜெனீவாத் திருவிழா'வையொட்டிய உண்டியல் குலுக்கல்போலவே இது தெரியுது.

ஏனென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் இப்படியாக ஒரு ஏற்பாட்டோடு ஒரு அணி வந்து பல இடங்களிலும் கடை விரித்திருந்தது. பிறகு அந்த அணியும் அதன் விசாரணை அறிக்கைகளும் முறைப்பாட்டுப் பதிவேடுகளும் காணாமற்போய் விட்டன.

அதாவது, காணாமற்போனோரைக் கண்டறிய வந்தோரின் கோவணங்களே காணாமற்போயிருந்தன.

இப்பொழுது இன்னொரு அணி களத்திலிறங்கியிருக்கிறது.

இதுவும் ஒரு நாளைக்குத் தங்களின் துண்டைக் காணவில்லை. துணியைக் காணவில்லை என்றுதான் போகுமாக இருந்தால் இந்த நாட்டில் பல விசயங்கள் காணாமற் போய்விடும்.

அப்படிக் காணாமற்போவதில் பல பெரிய தலைகளும் கூட சேர்த்தியாகி விடும்.

காலம் என்றும் பொய்த்துப்போவதில்லை. காற்று மாறியும் வீசும். ஏனென்றால். உலகம் எப்போதும் மிக மிக விசித்திரமான ஒன்று. அது முடியுடை வேந்தரையும் கந்தலை உடுக்க வைக்கும்.

கவனம், காணாமற்போனார் பற்றி விசாரிப்போரே... வருக.. இதைப் புரிக.

அடுத்தவர்க்கு தீங்கு நினைப்பது கூடாது. பொன், பொருள், கௌரவம், பட்டம், பதவி என்று சுயநலத்துடன் அலைந்து திரியக் கூடாது.
- சாய்பாபா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விழித்தலும் வினாவெழுப்புதலும்!

பெரும்பான்மைத் தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் போனார்கள். பிரதேச சபை நகர சபை என மிகப் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளுக்கும் உறுப்பினர்கள் பெருவாரியாகப் போனார்கள். கிழக்கு மாகாண சபையிலும் தமிழ்ப் பெரும்பான்மையாக அனுப்பியது இவர்களையே.

வடக்கு மாகாண சபைக்கு மக்களிடம் கோரியதற்கும் அதிகமாக மூன்றிலிரண்டிற்கும் மேற்பட்ட பெரும்பான்மை பெற்று ஆட்சியையே பிடித்தார்கள். எல்லா சபைகளிலும் மன்றங்களிலுமாக சுமார் 500 வரையான உறுப்பினர்கள் தற்போது பதவியிலிருக்கிறார்கள்.

மாதாமாதம் சம்பளம், வாகனங்கள், பதவிகளுக்காக கிடைக்கும் பல்வேறு சலுகைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தாங்கள் அனுபவித்துக் கொள்கிறார்கள். ஆனால் இத்தனை பதவிகளையும், அந்தந்த மன்றங்கள் சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு மக்களுக்கு என்ன செய்தார்கள்? எந்த ஒரு குறையைத் தான் தீர்த்துவைத்தார்கள்?

செயற்பட விடாமல் முடக்கி, மாகாண சபைக்கு தற்போதிருக்கும் அதிகாரங்களினூடாக மக்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றையும் கிடைக்கவிடாமற் செய்யப்போகிறார்கள் என்று தேர்தலுக்கு முந்தியே தினமுரசு எழுதியிருந்தது. அதன்படியே வென்றபின்னர், மாகாண சபைக் கூட்டத்தில், “இந்த சபை மூலம் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உலகுக்குக் காட்டவே இதை எடுத்தோம்” என்று அறிவித்துவிட்டு அவரவர் சொந்த அலுவல்களைக் கவனிக்கிறார்கள்.

ஏற்கனவே அவர்கள் எடுத்த உள்ளூராட்சி சபைகளை எல்லாம் தூங்குமடங்களாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த வரிசையில், வாராது வந்த மாகாண சபையையும் சேர்த்துவிட்டுச் சும்மா இருக்கிறார்கள். அவ்வப்போது அரச எதிர்ப்பு முழக்கங்களை எடுத்து வீசி ஜெனிவாவில் எல்லாம் சரிவரும் என்று சொல்லிவிட்டால் மக்கள் ஏமாந்துவிடுவார்கள் என்று தெரிந்திருக்கிறார்கள்.

இவர்களை யார் தட்டிக் கேட்பது? அல்லது தட்டிக் கேட்கவே தேவையில்லை... எல்லாம் சரியாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? இவர்கள் திருந்துவதற்கான, தங்கள் பொறுப்பை உணர்வதற்கான அழுத்தமாவது மக்கள் மத்தியிலிருந்து பலமாக வரவேண்டாமா?

சமூகப் பிரமுகர்களும், மதத் தலைவர்களும், ஊடகக்காரர்களும் எமது மக்களின் பிரச்சினைத் தீர்வு குறித்து எந்தவிதப் புது நோக்குமற்று அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர். அதுவே மக்களை அல்லல்களிலிருந்து மீள விடாமல் மேலும் மேலும் அழுந்திச் சுமை சுமக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

மக்களை இந்த முட்டுச்சந்திலிருந்து மீட்டு அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் புதுப்பாதைக்குரிய பேச்சுக்கள் இனி சமூகத்தின் சிந்திக்கும் தரப்புகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

உலகத்தின் இன்றைய போக்குகளையும், நமது யதார்த்த நிலையையும் தெரிந்து, இனிச் செல்லும் திசையைத் தீர்மானிக்க வேண்டிய உரையாடல்களை இங்கு திறக்க வேண்டும். சமூகத்தின் நுண்ணுணர்வாளர்கள் என்றவகையில் கலைஞர்களுக்கு புத்திஜீவிகளுக்கு இதில் பாரிய பொறுப்பிருக்கிறது.

இதுகாலவரையான அரசியலாளர்கள் இங்கு உருவாக்கி வைத்திருக்கும் விஷச்சுழலிலிருந்து எமது மக்களை மீட்டுப் புது வழி செலுத்துவதற்கான பேச்சுக்களை விவாதங்களை இவர்கள் தொடங்க வேண்டும்.

திரும்பத் திரும்ப மற்றவர்கள் மேல் பழியைப் போட்டுவிட்டு, வேறெங்குமிருந்து வரும் அதிசயத்திற்குக் காத்திருக்கச் சொல்லும் இந்த ஏமாற்று அரசியலிலிருந்து மக்களை விடுவிக்க முன்வர வேண்டும். விழிப்பதும் வினாவெழுப்புவதும் ஒன்றுசேருவதுமே இந்தப் புதைசேற்றிலிருந்து நம்மை வெளியேற வைக்கும்.

- ஆசிரியர்.

# சிங்கள மக்களை விழிப்புறச் செய்ய
# 2 வருடங்களுக்கு வாகனப்பேரணி
## பொதுபலசேனா ஏற்பாடு

சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தும் விதமாக பொதுபலசேனா இயக்கம் நாடு முழுவதும் எடுத்துச் செல்லும் வாகனப் பேரணியை இரண்டு வருடங்களுக்கு நாடு முழுவதும் எடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாக பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா இயக்கத்தினரின் இந்தப்பேரணி நேற்று முன்தினம் தம்பானை பிரதேசத்தைச் சென்றடைந்தது. இதன் போது ஆதிவாசித் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோவையும் சந்தித்தனர்.

சிங்கள இனம் மற்றும் பௌத்த மதம் நாசமடைவது தொடர்பில் தம்பானை பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில்இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள மக்கள் சமூகத்தினுள் நிலவும் பிளவுகள் காரணமாக ஏனைய இனத்தவர்கள் நாளாந்தம் மேன்மையடைந்து வருகின்றனர்.

இதன்காரணமாக சிங்கள மக்களுக்கு செல்வதற்கு இடமில்லாமல் போய்விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் போன்றவர்கள் வந்து வரலாற்றை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள்.

அதற்காக ஐரோப்பா போன்ற மேலைத்தேய சமூகத்தினரின் உதவிகளை கோருகின்றார்கள்.

சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்திறனற்ற செயற்பாடுகள் காரணமாகவே அவர்கள் தமது அதிகாரத்தை பயன்படுத்துகிறார்கள். தந்திரமான முறையில் செயற்படுகிறார்கள்.

பலவீனமான அரசியல், அமைதியான போக்கு போன்றவை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரிவினைகள், உள்ளக மோதல்கள் காரணமாக சிறுபான்மையினர் தமது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளனர். நாளாந்தம் அவர்கள் மேம்பட்டு வருவதன் காரணமாக சிங்கள இனத்தவர்கள் செல்வதற்கு இடமில்லாமல் போய்விட்டது என்றார்.

# அரச சார்பற்ற நிதி நிறுவனங்களில்
# அமுலாகிறது அரச கரும மொழிக்கொள்கை

(கொழும்பு)

பொதுமக்கள் அடிக்கடி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் அரச சார்பற்ற நிதி நிறுவனங்களில் அரச கரும மொழி கொள்கையை நடைமுறைப் படுத்த உள்ளதாக அரசகரும மொழி ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கு மத்திய வங்கி ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிதி நிறுவனங்களில் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மீளாய்வு செய்யத் திட்டமிட்டுள்ளது. மக்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்படும் நிதி நிறுவனங்களில் இந்த மீளாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிதி நிறுவனங்களில் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தெளிவூட்டுமாறு மத்திய வங்கியிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு அமைய, மத்திய வங்கியினால் குறித்த நிறுவனங்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி, அரச கரும மொழியை நடைமுறைப்படுத்துவது குறித்து மீளாய்வு செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெலிக்கடை சிறை மோதல்
# பாரிய மனிதப் படுகொலையாகும்
## ஐ.தே.க. எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் கடந்த வருடம் ஏற்பட்ட மோதலில் 90 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பாரிய மனிதப்படுகொலை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிக்கடை சிறைக்குள் நுழைய இராணுவத்தினருக்கு நீதிமன்ற ஆணை இருந்திருக்கவில்லை. விலங்கு போடப்பட்டிருந்த கைதிகள் மீதும் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து விசாரிக்க குழுவொன்றை நியமித்ததை தவிர அரசாங்கம் வேறு ஒன்றும் செய்யவில்லை. இதுவரை விசாரணை அறிக்கை வெளியிடப்படவில்லை.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கே இந்த நிலை என்றால் மற்றையவர்களின் நிலையை நினைத்துப் பார்த்துக்கொள்ள முடியும்.

ஐ.நா. சபையில் அரசாங்கம் இரண்டு தடவை தோற்றது. அடுத்த முறையும் அரசாங்கம் ஐ.நா. வில் தோற்றால் பாரிய பிரச்சினை ஏற்படும். ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்காது மேலும் மேலும் பிரச்சினைகளை வளர்க்கவே செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

1988,1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேசத்துடன் பேசி அப்போதைய அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால் இந்த அரசாங்கத்தால் அதனை செய்ய முடியவில்லை என்றார்.

# ஈரான் - இலங்கை
# வலுவான நட்புறவு

ஈரானுடனான உறவுகளைத் தொடரப் போவதாகவும் ஈரானுடன் வலுவான நட்புறவைப் பேணுவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர் றிசாட் பதியுதீன் ஈரானுக்கு விஜயம் செய்து, அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் மொர்டசா சர்மானியை தெஹ்ரானில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது, முதலீடு மற்றும் ஏனைய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சரும் தெரிவித்துள்ளார்.



# போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுமா?

**விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்தம் முறிவடைந்தால் அதற்கான ஆயத்தங்களை துல்லியமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமெரிக்கா இலங்கையை வலியுறுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர் இவ்வாறு அமெரிக்கா கோரியிருந்ததென அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனாலும், போரின்போது அமெரிக்காவின் பரிந்துரைக்கு அமைய அரசாங்கம் கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்தவில்லை என அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**வே. அர்ச்சுணன்**

எதிர்வரும் மார்ச்மாதம் இலங்கைக்கு எதிரான சர்வதேசவிசாரணைகள் இடம்பெறுவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாக பரவலாக பேசப்படுகின்ற போதிலும் இந்த விடயம் எந்தளவு தூரம் முன்னேற்றகரமாக இருக்கும் என்பது தற்போது கேள்விக்குறியாக தொடங்கியுள்ளது.

அதாவது மேற்குலக நாடுகள் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்ற போதிலும் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் சில வேளைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அந்த விசாரணைகள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் கேள்விக்குறியாக உள்ளதாகவே அரசியல் விமர்சகர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக இறுதிக்கட்டப் போரின்போது அரசாங்கம் இன அழிப்பு போரை செய்யவில்லை என்று ஏற்கனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசாங்கத்திற்கு சார்பாக குரல் கொடுத்திருக்கின்ற செயற்பாடானது, அதாவது ஆபத்தான கட்டங்களில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு கூட்டமைப்பு தயாராக உள்ளது என்பதை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தும் விடயங்களாகும்.

இவை ஒருபுறம் இருக்க இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதனை இலங்கை எவ்வாறு எதிர்கொள்ளும் என்பது தொடர்பில் பல்வேறு ஊகங்களும் கருத்துகளும் நிலவுகின்ற போதிலும், இலங்கை மார்ச்மாத ஜெனிவாப்போரை எதிர்கொள்ள முழுஅளவில் தயாராகிவிட்டதாக அரச தரப்புத் தகவலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகள் சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வன்முறைகள் என அனைத்துமே முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென அமெரிக்கா இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. அண்மையில் வொஷிங்டனில்இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹாப் இந்த விடயத்தை வலியுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில் இலங்கையில் நடந்து முடிந்த கொமன்வெல்த் மாநாட்டின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ30வருட போர் நிறைவடைந்த நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கால அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். ஐ.நா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் இதற்கு அவசரப் படக்கூடாது என்று கூறியிருந்தார். இதை விட வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவரும் அமெரிக்காவும் ஐ.நாவும் கால அவகாசம் தமக்கு வழங்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இதே வேளை இலங்கைக்கு எதிரான பிரேரணை சர்வதேச விசாரணைக்கு வழிவகுக்குமென்று அரசாங்கத்தை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இவ் எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

தென்னாபிரிக்காவில் யுத்தம் முடிந்த பின்னர் உயிரிழப்புகளுக்காக நெல்சன் மண்டேலா மக்களிடம் மன்னிப்புக் கூறினார். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? உயிரிழப்புக்காக பால் சோறு உண்டு வெற்றிவிழாக்கொண்டாடினீர்கள். அடுத்த மார்ச்மாதம் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கு அரசு எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறது. அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செயல்படுகின்றது என கூறுகின்றீர்கள். கியூபா அமெரிக்காவிற்கு எதிராக ஐ.நா.வில் பிரேரணை கொண்டு வருகிறது. இதன்போது கியூபாவிற்கு 108 வாக்குகள் ஆதரவாக கிடைத்தன. அமெரிக்காவிற்கு 2 வாக்குகளே கிடைத்தன. எனவே, ஐ.நா.வை அமெரிக்கா ஆட்டுவிக்கிறதென்ற உங்கள் கருத்தை எப்படி ஏற்க முடியும்?

இலங்கைக்கு எதிராக கடும் விமர்சனங்கள் உள்ளன. இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. சூடானுக்கும் கிழக்குத் திமோருக்கும் எதிராக ஐ.நா.வில் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. இறுதியில் அந்நாடுகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன. இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கும். எமக்கு எதிராக பிரேரணைகள் முன்வைக்கப்படமாட்டாது என்கிறீர்கள். ஆனால் அனைத்தும் இடம்பெற்றன.

கமரூனின் கருத்தை இலகுவாகஎண்ண வேண்டாம். எமக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். பராக் ஒபாமாவின் அலுவலகத்தில் இருபதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் தொழில் புரிகின்றனர். எனவே இலங்கை மிகவும் கவனமாக நடக்கவேண்டிய காலம் இதுவென்று பலபடக் கூறி ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை என்பது இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்று இலங்கையின் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார விசனம் வெளியிட்டுள்ளார். இவ்வாறு இலங்கை சர்வதேச நாடுகளின் தூதுவர்களையும் ஐக்கியநாடுகள் சபைக் குழுவினரையும் கடுமையாக விமர்சித்து வருகின்றது. ஆனால் மேற்குலக நாடுகள் இலங்கையின் விமர்சனங்கள், கருத்துக்கள் எதனையும் கணக்கில் எடுக்காமல் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்குரிய பொறிமுறைக்கான தீர்மானத்தை முன்னெடுப்பதற்கான வியூகங்களில் தற்பொழுதே களமிறங்கியுள்ளன.

ஆனால் இலங்கை தற்போது புதிய உபாயங்களை வகுத்தவாறு மேற்குலகுடன் ஜெனீவா போரைச் சந்திக்க தயாராகி வருவதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதன் ஒரு வெளிப்பாடாக இலங்கை, அமெரிக்காவிற்கு எதிராக வெளிப்படையாகவே தற்போது கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. அதாவது அமெரிக்காவே போரைத் தூண்டியது போரை நடத்துமாறு கூறியது என்ற சாரப்பட இலங்கையின் கருத்துகள் தற்போது வெளிப்படத் தொடங்கியுள்ளன. புலிகளுக்கு எதிரான போரின்போது கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்துமாறு அமெரிக்காவே கோரிக்கை விடுத்தது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர் இவ்வாறு அமெரிக்கா கோரியிருந்ததென அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையை வலுப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொத்தணிக் குண்டு பயன்பாடு குறித்த சர்வதேச பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடாத போதிலும், அமெரிக்காவின் பரிந்துரைக்கு அமைய அரசாங்கம் கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்தவில்லை என அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொத்தணிக் குண்டுகளை பயன்படுத்தக் கூடிய சாத்தியங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை பயன்படுத்தவில்லை என இராணுவத்தினரும், விமானப்படையினரும் தெரிவித்துள்ளனர். நிலக்கண்ணி வெடி அகற்றும் படையினரோ அல்லது தன்னார்வ தொண்டர்களோ இது வரையில் கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைக்கான எந்தவிதமான பொருட்களையும் மீட்டதில்லை.

விடுதலைப் .புலிகளுடனான யுத்த நிறுத்தம் முறிவடைந்தால் அதற்கான ஆயத்தங்களை துல்லியமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமெரிக்கா இலங்கையை வலியுறுத்தி வந்ததாகவும், இலங்கை தரப்பில் அமெரிக்கா மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. இதைவிட விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் அவர்களின் போர்க்கப்பல்கள் தொடர்பிலான தகவல்கள் நடமாட்டங்கள் என்பன தொடர்பில் அமெரிக்காவே தமக்குத் தகவல் வழங்கியதாக இலங்கை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தது.

இதைவிட புலிகளிற்குஎதிரான போரில் இந்தியாவே கூடுதலான ஆதரவுகளை ஆயுத ரீதியாகவும், வேறு பல வடிவங்களிலும் தமக்கு வழங்கியதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராயபக்ஷ ஏற்கனவே கருத்துக்களை வெளியிட்டிருந்தார். ஒட்டு மொத்தத்தில் விடுதலைப்புலிகளிற்கு எதிரான போரினை தாங்கள் தனியே முன்னெடுக்கவில்லை, மேற்குலக நாடுகளின் ஆதரவுடனேயே முன்னெடுத்தோம் எனவே தம்மீது விசாரணைகள் நடத்தப்பட்டால் மேற்குலக நாடுகள் மீதும் விசாரணைகள் நடத்தப்படவேண்டிவரும் என்ற சாரப்பட இலங்கை வியூகம் வகுத்துள்ளதுடன் இவ்வாறு கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கையும் மேற்குலகும் மோதுகின்ற ஒரு முள்ளிவாய்க்காலாகக் கூட இருக்கலாமென கருதப்பட இடமுண்டு. ஆனால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் போர்க்குற்ற விசாரணை என்பது கேள்விக்குறியான ஒன்றாகவே இருக்குமென விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

**விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் அவர்களின் போர்க்கப்பல்கள் தொடர்பிலான தகவல்கள் நடமாட்டங்கள் என்பன தொடர்பில் அமெரிக்காவே தமக்குத் தகவல் வழங்கியதாகவும், அத்துடன் இந்தியாவே கூடுதலான ஆதரவுகளை ஆயுத் ரீதியாகவும், வேறு பல வடிவங்களிலும் தமக்கு வழங்கியதாக இலங்கை கருத்துக்களை வெளியிட்டிருந்தது. ஒட்டு மொத்தத்தில் விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரினை நாங்கள் தனியே முன்னெடுக்கவில்லை, மேற்குலக நாடுகளின் ஆதவுடனேயே முன்னெடுத்தோம் எனவே தம்மீது விசாரணைகள் நடத்தப்பட்டால் மேற்குலக நாடுகள் மீதும் விசாரணைகள் நடத்தப்படவேண்டி வரும் என்ற சாரப்பட இலங்கை வியூகம் வகுத்துள்ளதுடன் இவ்வாறு கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது.**

# 25 இலட்சம் மேலதிக வாக்குகளால் ஜனாதிபதி மீண்டும் வெற்றி பெறுவது உறுதி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதி மகிந்த ராஜாபக்ஷ 25 இலட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறுவதும் நிச்சயமாகும். முடிந்தால் எதிர்க்கட்சியினர் எவரையாவது களமிறக்கி வெற்றி பெற்றுக் காட்டட்டும் என நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சவால விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

எந்தவொரு திகதியிலும் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் நடாத்தத் தயாராகவே உள்ளோம். ஆனால் தேர்தலை நடாத்துவது எப்போது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அரசாங்கமும் மக்களுமே ஆகும்.

எமக்குத் தேவையான தினத்திலேயே தேர்தலை நடாத்துவோம். ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு எமக்கு எமது கட்சியிலேயே வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருக்கின்றார்.

மக்கள் ஆதரவும் அவருக்கு உள்ளது. அந்த ஆதரவை அசைக்க முடியாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 18 இலட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்.

இம்முறை தேர்தலில் 25 இலட்சம் மேலதிகமான வாக்குகளால் வெற்றி பெறுவது நிச்சயமாகும். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவோம்.

ஆனால் ஐ.தே.கட்சிக்கு இதில் களமிறக்க வேட்பாளர் இருக்கின்றாரா அல்லது பொது வேட்பாளர் யாரென்பதைக் கூற முடியுமா? எதுவுமே கிடையாது. ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி அனைத்துக் கட்சிகளும் வங்குரோத்து அடைந்துவிட்டன.

கீழே விழுந்து விட்ட இவர்களால் மீள எழமுடியாது. வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத எதிர்க்கட்சியினால் எப்படி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும்.

நாட்டில் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெறுகிறது. ராஜபக்ஷ றெஜிமன்ட் ஆட்சி நடக்கவில்லை. ஆனால் மங்கள எம்.பியின் கனவிலும் ஜனாதிபதியே வருகிறார். அதற்காக அனுதாபப் படத்தான் முடியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.யும் இன்றும் விடுதலைப் புலி பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாத மனநிலையிலிருந்து மீளவில்லை.

யுத்தம் முடிந்து தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இதனை கூட்டமைப்பினர் விரும்பவில்லை

எனவே மீண்டும் சமாதானத்தை சீர்குலைத்து பயங்கரவாதத்தை உருவாக்க புள்ளி விபரக் கணக்கெடுப்பில் நம் பகத்தன்மை இல்லையென்ற பொய்ப் பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர் என்றார்.

# ஆணைக்குழுவை செயற்படுத்தாமல் அமைதியான தேர்தலை நடாத்த முடியாது



(கொழும்பு)

தேர்தல் ஆணைக் குழுவை செயற்படுத்தாமல் நீதியான மற்றும் அமைதியான தேர்தலை நடாத்த முடியாது என்று ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

103/2 அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் படி, நீதியான மற்றும் அமைதியான தேர்தலை நடாத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று ஆணையாளர்களை உள்ளடக்கியதே இந்த ஆணைக்குழுவாகும்.

எனினும் இந்த ஆணைக்குழுவிற்கு இதுவரையிலும் மூன்று ஆணையாளர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சாதாரண அரச அதிகாரிகளைக் கொண்டு தேர்தலை நடாத்துவதால் அந்தத் தேர்தல் நீதியானதாக இருக்காது, அமைதியான தேர்தலாகவும் இருக்காது என்றார்.

# மத்திய கிழக்கிற்கு சென்றவர்களில் 3000 பேர் நாடு திரும்ப விண்ணப்பம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்று மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்களிடமிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும் ஒப்பந்த காலப்பகுதிக்குள் எவரும் நாடு திரும்ப முடியாது என பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கலரன் தெணிய தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்பவர்களுக்கான ஒப்பந்தகாலம் 2 வருடங்களாக இருப்பதுடன் இந்தக் காலப்பகுதியில் ஒப்பந்ததத்தை மீறி மீண்டும் நாடு திரும்ப முடியாது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மக்கள் தெளிவடைய வேண்டும்.

கடந்த வருடம் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன் இவர்களுள் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பில் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்னர் தெளிவூட்டப்பட்ட போதிலும் அங்கு சென்ற பின்னர் சிலர் மீண்டும் நாட்டிற்கு வர முயற்சிப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்கல்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா விசேட முற்பணவுக் கொடுப்பனவுகளை வழங்குமாறு சகல திணைக்களத்தலைவர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இதுதொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதற்கான சுற்றுநிருபம் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக இந்தக் கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் அரச ஊழியர்களுக்கு ஏற்படும் பிள்ளைகளின் கல்விச்செலவு மற்றும அத்தியாவசிய செலவுகளை ஈடுசெய்யும் விதத்தில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

வழங்கப்படுகின்ற விசேட கொடுப்பனவானது, மாதாந்த சம்பளத்திலிருந்து தவணைக் கட்டண அடிப்படையில் மீள அறவிடப்படவுள்ளது.

# ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஐ.தே.க.வில் இணையத் திட்டம்

## கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தமது கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார். பல உறுப்பினர்கள் தற் போதைய நிலையில் இது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்வது தொடர்பில் கலந்துரையாடினர்.

கூட்டமைப்பில் இருக்கும் மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமல்ல அமைச்சர்களுக்கும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

25 உள்ளூராட்சி மன்றங்களில் வரவு செலவு திட்டம் தோல்வி கண்டது இதன் வெளிப்பாடே ஆகும். மக்கள் மத்தியில் உள்ள விரக்தியின் வெளிப்பாட்டையே கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வெளிகாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமையும் உறுப்பினர்கள் சிலர் நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# 9,59,254 பேருக்கு விவசாய ஓய்வூதியம்

விவசாய ஓய்வூதிய திட்டத்தில் 9,59,254 பேர் அங்கம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி பரிந்துரைத்த விவசாய ஓய்வூதிய திட்டத்தை விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையினூடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருடத்தில் விவசாய ஓய்வூதியம் பெறுவதற்கு 1,28,659 விவசாயிகள் தகுதி பெற்றுள்ளதோடு, இவர்களுக்கு 1500 ரூபாவுக்கும் 5 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இவர்களில் ஜனவரி மாதம், 1,28,659 பேர் ஓய்வூதியம் பெற தகுதி பெற்று 64 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வருடம் முதல் ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஓய்வூதிய நிதியத்துக்கு ஆரம்பகட்டமாக ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்க உள்ளது. இது போன்ற தொகை 5 வருடங்களுக்கு தொடர்ந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஓய்வூதிய நிதியத்துக்குத் தேவையான திருத்தங்கள் வர்த்தமானி மூலம் சட்டமாக்கப்படும்.

# வெலிக்கடை கைதிகள் கொலை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பு


(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் 27 பேர் கொல்லப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை தனக்கு கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

இந்த அறிக்கை ஜனாதிபதிக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் கையளிக்கப்பட விருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தப்பத்து, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் குணசேன தேனபது மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சட்ட ஆலோசகர் லலித் அந்தாஹெந்தி ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட குழுவே நியமிக்கப்பட்டிருந்தனர்.

# அரசாங்கத்தை தவிர எந்தவொரு கட்சியும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது



(கொழும்பு)

அரசாங்கத்தை தவிர வேறு எந்தவொரு கட்சியாலும் நாட்டை மாற்றியமைத்து அபிவிருத்தி செய்ய முடியாது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸை பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,


ஜனாதிபதியைத் தவிர யார் இந்த மாற்றங்களை மேற்கொண்டார்கள். இன்னும் 20, 30 வருடங்களுக்கு எம்மால் இந்தப் பயணத்தைத் தொடர முடியும். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவ சபையை நிறுவியுள்ளது.

உலகில் எந்தவொரு கட்சியும் இவ்வாறு சபைகளை நிறுவியதில்லை. 5 தலைவர்களின் ஊடாக கட்சியொன்றும் அரசாங்கம் ஒன்றும் முன்னெடுக்கப் படுவதில்லை.

யார் தலைவர் என்று தெரியாது. யாரை நம்புவது. ஜே.வி.பி.க்கு என்ன நடந்தது. மாகாண சபையின் ஒரு உறுப்பினரைப் பெறமுடியாத நிலைக்குச் சென்றுள்ளது என்றார்.

# மனதினை செம்மையாக்குவதற்கு கலைகள் முக்கிய இடம்பெறுகிறது

## முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவிப்பு



(வடமராட்சி)

நவீனத்துவமானதும் அவசரமானதுமான எமது வாழ்க்கைப் பயணத்தில் மனதினை செம்மையாக்குவதற்கு கலைகள் முக்கிய இடம்பெறுகிறது. அத்தகைய கலைகளை மதிக்கின்ற பண்பை சகலரும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என யாழ்.பல கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் சமூகவியல் துறை பேராசிரியருமான கலாநிதி என். சண்முகலிங்கன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் 4ஆவது கலை இலக்கிய பெருவிழா அண்மையில் நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலய வீதியில் மன்றத் தலைவர் ர.மகிந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து நெய்தல் எனும் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களாகிய நாம் மிக நீண்ட தூரதுன்பங்களைக் கடந்து பயணம் செய்கின்றோம். இந்தப் பயணத்தின் வாழ்வே எமக்கு போராட்டமாக தோன்றியுள்ளது. அதற்கு மன வலிமை தேவையாகவுள்ளது ஆகவே வாழ்வது என்பது மனது சம்பந்தமான விடயமாக உள்ளதால் வாழ்வு செம்மையாக அமைவதுடன் மனமும் செம்மையாக அமையவேண்டும். அந்த மனதுக்கும் அடுத்ததாக ஆத்மா இவை அழகுபடுவதற்கும் புனிதப்படுவதற்கும் பாரம்பரியக் கலைகளை மதிக்கின்ற பண்பாடுகளை வளர்க்கவேண்டும்.

மேலும் வல்வெட்டித்துறை கிராமத்தின் இளமைபற்றி அழகைப்பற்றி வீரத்தைப்பற்றி பண்பாட்டு செழுமையைப் பற்றி நான் சொல்வதை விட உங்களது புகழ் உலக வரலாற்றுத் தடத்தில் அழிக்க முடியாதளவுக்கு எழுதப்பட்டு தற்பெருமை கொண்ட பூமியாக விளங்குகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# நூற்றாண்டு விழா

புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டு ஸ்தாபகரின் உருவச்சிலையை திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

இருபிட்டி கிராமத்தில் வாழ்ந்த பெரியார் வேலாயுதர் விசுவலிங்கம் என்பவர் இக்கிராமத்து மாணவர்கள் நீண்டதூரம் நடந்து சென்று கல்வி கற்று வந்தமையை கருத்தில் கொண்டு 1914ஆண்டு தனது சொந்தச் செலவில் பாடசாலையை அமைத்து அதிபர், ஆசிரியர்களுக்கு பதினொரு வருடங்கள் சம்பளம் கொடுத்து வந்தார். தனது வீட்டில் உபதபாலகத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

இவரது மகன் வி.சோமஸ்கந்தன் உபதபால் அதிபராகக் கடமையாற்றினார். 1940ஆம் ஆண்டு புங்குடுதீவு, புளியடித்துறை ஊடாக நயினாதீவுக்கும், அனலைதீவுக்கும் மோட்டார் படகு சேவையும், இன்னொரு மோட்டார் படகு வேவையை யாழ்ப்பாணத்துக்கும் (அலுப்பாந்தி) ஆரம்பித்து வைத்தார். 1909 புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் பிள்ளையார் கோவிலை புரைமைத்து பெருந்திருவிழா செய்தார். இவரது பணிகளுக்கு இவரது மகன் காலம் சென்ற வி.கார்த்திகேசு (வடபிராந்திய முகாமையாளர் இலங்கை பால் சபை) இவரது மருமக்களாகிய காலம் சென்றவர்களான முருகேசு உடையர் (தீவுப்பகுதி நா.ஆ.நாமசிவாயம், திடீர் மரண விசாரணைகள் அதிகாரி, புங்குடுதீவு ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினார்கள். (பா)

## ஆன்மீக நிகழ்வுகள்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிகழ்வில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் வே.ஞானசம்பந்தனின் இன்னிசை நிகழ்வு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.

# சமூகசேவைத்திணைக்களத்தால் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

(கரணவாய்)

வடக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களமும் மத்திய சமூகசேவை அமைச்சும் இணைந்து கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட 19 பயனாளிகளுக்கு ரூபா 15000 வீதம் சுயதொழிலை மேற் கொள்ள (கால் நடைவளாப்பு, தையல், வியாபாரம்) நன்கொடையாக வழங்கியுள்ளது.

மேலும் மாற்றாற்றலுடையவர்களுக்கு அவர்கள் நாளாந்தம் செயலை இலகுவாக மேற்கொள்ள 13 முச்சக்கரவண்டியும், 10 சக்கர நாற்காலி என்பனவற்றை வழங்கியுள்ளதுடன் கடும்மழை, காற்றினால் பாதிக்கப்பட்ட 03 குடிசை வீடுகளுக்கும் தலா ரூபா 20,000 வீதம் வழங்கி வீட்டினை புனரமைக்க உதவி புரிந்துள்ளது.

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 2023 பயனாளிகளுக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கி வருகின்றது.

வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம், யுனிசெவ் நிறுவன நிதி ஊடாக 5 பேருக்கு தலா 35,000 ரூபா வீதம் சுயதொழில் உதவி வழங்கி உள்ளது. இவர்கள் தமது சுயதொழிலை திறம்பட மேற்கொள்கின்றனர். மேலும் யுனிசெவ் நிறுவன உதவியுடன் 3 பயனாளிகளுக்கு மாதாந்தம் சிகிச்சைக்கு சென்று வரபோக்குவரத்து செலவாக 15,000 ரூபா வீதம் வழங்கி உள்ளது.(18)






## விருச்சிகம்

(விசாகம் 4, அனுசம், கேட்டை)

ஏழரைச் சனி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளை 13.06.2014 வரை வியாழன் 8இல் (அஷ்டமத்துக்குரு) உள்ளதால் காரிய சித்திகள் காலதாமதப்பட்டே நிறைவேறும். சட்டத்தின் பிடியில் சிலர் சிக்க வேண்டி நேரிடும். விவாகம், பயணம் என்பவற்றை அடுத்த வியாழ மாற்றம் வரை ஒத்திவைக்கவும். பிறருக்கு பிணைவைக்க உதவ சிபார்சு செய்வதைக் கைவிடவும். வீசாப்பிரச்சினையால் சிலர் தாயகம் திரும்பும் பரிதாபநிலை ஏற்படலாம்.

அஷ்டமத்து வியாழன் 13.06.2014இல் நீங்கி ஒருவருட காலத்திற்கு குரு 9ஆம் நிலையில் இருப்பதினால் ஏழரைச்சனியால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கஷ்டங்கள் வெகுவாகக் குறைந்துவிடும். வெளியூர் பயணம் மேற்கொள்ளும் பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்துங்கள். பிதாவின் உடல் நிலைதேறினாலும் சிலர் இழப்பு அல்லது பிரிவினையை எதிர்பாருங்கள். விவாக முயற்சி கனகச்சிதமாக நிறைவேறும். கடன் தொல்லை படிப்படியாக நீங்கும்.

மனை, வாகனயோகம் கிட்டும். விரிசலடைந்திருந்த உறவுகள் கை கொடுக்கும். விவசாய முயற்சிகளும் நற்பலன் கொடுக்கும்.

விருச்சிகராசிக்கு 7 1/2ச்சனி ஆரம்பித்து 16.12.2014 வரை விரயச்சனியாக 12ஆம் கோசரத்தில் நின்று செலவினையும், அலைச்சலையும் ஈடுபடும் செயல்களில் ஏற்படுத்திவிடுவார். பிறர் உதவினால் மட்டுமே வெளியூர் பயணத்தில் கால் பதியுங்கள் புதிய முயற்சிகள் திசாபுத்தி நன்றாக இருப்பின் தொடங்கலாம். நிலுவைகள் சேராவண்ணம் இழுபடும். சுபகாரியங்கள் தடைதாமதம் ஏற்பட்டே நிறைவேறும். ஊடகவியலாளர்கள் நீங்கள் எழுதும் செய்திகளில் நம்பகத்தன்மையை ஏற்படுத்துதல் அவசியம்.

ஏழரைச்சனி நடைபெறும் காலத்தில் இராகுகேது என்பன 21.06.2014 வரை முறையே 12ஆம், 6ஆம் கோசரத்தில் நிற்பது நன்மையான பலாபலன்களை அதிகம் எதிர்பார்க்க வேண்டாம் அதிர்ஷ்டவசமாக சிலருக்கு அமெரிக்க லொத்தர்வீசாகிட்டும் யோகமுண்டாகும். சுபகாரிங்களுக்குச் செலவுண்டு. நீண்டநாட்களாக நிலவிய பகைமையுணர்ச்சி சமரசத்தினால் மறைந்து விடும். 21.06.2014 தொடக்கம் 1 1/2 ஆண்டுக்கு இராகுகேது என்பன 11ஆம், 5ஆம் நிலைக்கு வருவது நொந்த உள்ளத்திற்கு ஆறுதலைத்தரும். மக்களினால் பணவரவுண்டு. குழந்தைப்பாக்கியம் கிடைக்கும். மூடப்பட்ட வியாபார நிலையங்கள் திறக்கப்படும். நோய்கள் நீங்கும். (தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா. வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்



(17.01.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 04 ஆம் திகதி.
பூசநட்சத்திரம் பி.ப.4.21 வரை. பின் ஆயிலியம்.
மரணயோகம். பிரதமை. தைப்பூசம்.
இராகுகாலம் 11.05 - 12.35 வரை. சுபநேரம் 06.35 - 08.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — மங்கல நிகழ்வு நெருங்குவதினால் குடும்பத்தவர் ஒன்று சேர்ந்து வேலைப்பளுவில் பங்கேற்றல், மருத்துவச் செலவு கூடிக்காணப்பட்டதால் அரச வைத்தியசாலையை நாடிநோய் தீர்க்க முயலல்.

**ரிஷபம்** — குடியுரிமை பெற்ற பெண் மணியை திருமணம் செய்ய முயற்சித்தல், சொத்துச் சம்பந்தமாக நடந்தேறிய வழக்குசாதகமான முடி வினைக்கொண்டுவருதல்.

**மிதுனம்** — மதியாதார் தலைவாசல் மிதிக்க முயன்ற மகனைக் கண்டித்ததால் ரகளை ஏற்படல், நீரிழிவு நோயின் ஆரம்பம் எனக்கண்டுபிடித்தால் உணவுக்கட்டுப்பாட்டில் கவனஞ்செலுத்தல்.

**கடகம்** — குடும்பப்பாரம் சுமக்க முடியாமல் திண்டாடிய வேளையில் தொழில் கிட்டியமையினால் ஆனந்தம், பொருட்களைப் பதுக்கி கூடிய விலைக்கு விற்க எடுத்த முயற்சி தீடீர்சோதனையால் தவிடுபொடியாதல்.

**சிம்மம்** — காலதாமதமின்றி உரிய நேரத்தில் சென்றதினால் நண்பரின் உதவி கிட்டுதல், பொய்யான ஜாதகத்தைக்காட்டி திருமணம் செய்து வைக்க எடுத்த முயற்சி சோதிடரால் முறியடித்தல்.

**கன்னி** — தவறிய ஆவணம் மீண்டும் கிடைக்க சல்லடை போட்டுத்தேடிப் பெற முயற்சித்தல், எழுத்துக் கணக்கின்றி கொடுத்த கடன் கைக்கு வந்து சேராமையினால் மனக்கிலேசம்.

**துலாம்** — உணவுக்கட்டுப்பாட்டை அலட்சியம் செய்கின்ற படியினால் நோய் குணமடையாதிருத்தல், அனுபவமே சிறந்த ஆசானாக கைக்கொண்டு செய்தொழிலை திறம்பட நிர்வகித்தல்.

**விருச்சிகம்** — வரவு குறைந்து செலவினங்கள் கூடிக்காணப்படுவதினால் சேமிப்பில் ஆர்வம் காட்டல், புதியன கொள்வனவு செய்யும் போது காலாவதித் திகதி, நம்பகத்தன்மையைக் கவனித்தல்.

**தனுசு** — இடைத்தங்கல் நாட்டில் நீண்ட காலப்பொழுதில் இருந்த நிலை மாறி தாயகம் வந்தடைதல், நஷ்டத்தில் இயங்கிய தொழிலைக் கைவிட்டு பங்குதாரராக சேரல்.

**மகரம்** — விவாகம் முடிவடைந்த போதிலும் கணவர் பற்றிய தொடர்பாடல் கிடைக்காமையால் வருத்தம், எதிரியின் அடாவடித்தனம் அற்றுப்போனதால் உளப் பாதிப்பு நீங்கிவிடல்.

**கும்பம்** — வியாழசுகம் சாதகமாக இருப்பதினால் ஈடுபடும் புது முயற்சியில் இலாபம் தக்க வைத்தல், நீண்ட காலம் குழந்தைப் பாக்கியம் இல்லை என்ற கவலை நீக்க ஜீவன் உருவாதல்.

**மீனம்** — செய்தொழிலில் ஊக்கம் காட்டிய படியினால் சக ஊழியர்களும் ஒத்துழைத்தல், வெளிநாட்டினின்றும் உறவுகள் வருகைதரும் செய்தி வந்தடைதல்.

## இனியாவது சும்மா விடுங்கோப்பா!



(புதுடில்லி)

அவுஸ்ரேலியாவில் நடக்கும் பிக்போஸ் ருவென்ரி-20 தொடரில் பங்கேற்க, சிட்னி தண்டர் நிர்வாகிகள், சச்சினை அணுகியுள்ளதாகத் தெரிகிறது.

இந்திய அணியின் சச்சின் (வயது-40). சர்வதேச கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்த இவர், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முழுமையாக கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்றார். இந்த ஆண்டு நடக்கும் ஏழாவது பிரிமியர் லீக் தொடரில் கூட இவர் பங்கேற்கவில்லை.

இதனிடையே, அவுஸ்ரேலியாவில் தற்போது பிக்போஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் பங்கேற்கும் சிட்னி தண்டர்ஸ் அணி, கடந்த இரண்டு தொடர்களில் பங்கேற்ற 15 போட்டிகளில், இரண்டில் மட்டும் வெற்றி பெற்றது. ஒருமுறை கூட முதல் சுற்றைத் தாண்டவில்லை.

இந்த அணியில் அவுஸ்ரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர், இலங்கையின் டில்சான் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். தற்போது மைக்கல் ஹசி கப்டனாக உள்ள இந்த அணியைபிரபலப்படுத்தும் வகையில், அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் சேர்க்கப்பட்டார்.

இதனிடையே, சிட்னி அணியில் ஓய்வு பெற்ற இந்திய வீரர் சச்சினையும் சேர்க்க முயற்சிகள் நடக்கின்றன. 78 ருவென்ரி-20 போட்டிகளில் பங்கேற்ற சச்சின், ஒரு சதம், 13 அரைச்சதம் அடித்துள்ளார். இவரது சராசரி, 119 ஓட்டங்கள். இவரை சேர்ப்பதால் அணியின் துடுப்பாட்டம் வலுப்பெறும் என்று நம்புகின்றனர். இதற்காக நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் சபை சார்பில், சச்சினை நான்கு வாரங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் செய்து தருமாறு மாநில அரசை அணுகியுள்ளனர். இதை சச்சின் ஏற்றதாகத் தெரியவில்லை.

## தற்காலிக குழாம் அறிவிப்பு

(லண்டன்)

பங்களாதேஷில் நடைபெறவுள்ள உலக ருவென்ரி-20 தொடருக்கான இங்கிலாந்து அணியின் 30 பேர் கொண்ட தற்காலிக குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணியின் 15 பேர் கொண்ட குழாம் இந்த 30 பேர் கொண்ட குழாமிலிருந்து தெரிவு செய்யப்படும்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள இங்கிலாந்தின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சனும் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது இங்கிலாந்து எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளதாகக் கருதப்பட்டநிலையிலேயே அவர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட குழாம்:

ஸ்ரூவெர்ட் புரொட், மொயீன் அலி, ஜொனதன் பெயர்ஸ்ரோ, கரி பலன்ஸ், ரவி போப்பாரா, ஸ்கொட் போர்த்விக், ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், மைக்கல் காபெரி, ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் பின், ஹரி குர்ணி, அலெக்ஸ் ஹேல்ஸ், கிறிஸ் ஜோர்டான், கிறெய்க் கீஸ்வெற்றர், மைக்கல் லம்ப், இயன் மோர்கன், கிரஹாம் ஒனியன்ஸ், ஸ்டீவன் பரி, சமித் பட்டேல், கெவின் பீற்றர்சன், போயட் ராங்கின், ஜோ றூட், பென் ஸ்ரோக்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், ஜேம்ஸ் ட்ரெட்வெல், வின்ஸ், கிறிஸ் வோக்ஸ், லூக் ரைட்

## ஒரு நாள் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிப்பு

(நேப்பியர்)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான, ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

நட்சத்திர சுழற்பந்துவீச்சாளரான வெட்டோரி, துடுப்பாட்ட வீரர் முன்ரோ ஆகியோர் அணியில் இடம் பெறவில்லை. காயம் குணமான நிலையில் வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌத்தி அணியில் மீண்டும் இடம் பிடித்துள்ளார். முதல் ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நேப்பியரிலும், 2ஆவது போட்டி 22ஆம் திகதி ஹமில்டனிலும், 3ஆவது போட்டி 25ஆம் திகதி ஒக்லாந்திலும், 4ஆவது போட்டி 28ஆம் திகதி ஹமில்டனிலும், கடைசி மற்றும் 5ஆவது போட்டி 31ஆம் திகதி வெலிங்டனிலும் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்து அணி: மக்கலம் (கப்டன்), குப்தில், ரைடர், வில்லியம்ஸன், ரோஸ் ரெய்லர், கோரி அண்டர்சன், ரோன்சி, நீஸம், நதன் மக்கல்லம், ரம் சௌத்தி, மில்ஸ், மெக்லகன் மற்றும் அடம் மிலின்.

## வெப்ப நிலை அதிகரிப்பால் ஆஸி. ஓப்பன் இடை நிறுத்தம்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் அவுஸ்ரேலிய நாட்டின் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகின்றன. நேற்று 4ஆவது நாள் போட்டிகள் நடைபெற்றன. பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா மற்றும் இத்தாலி நாட்டின் கரீன் நாப் ஆகியோர் விளையாடினர். இதில், மரியா ஷரபோவா கடுமையாகப் போராடி வெற்றி பெற்றார்.

ஆனால் இந்த போட்டியின்போது மைதானத்தில், வெப்பநிலை அதிகரித்துக் காணப்பட்டது. இந்நிலையில், மெல்பேர்ன் பார்க் மைதானத்தில் வெப்பநிலை 41 டிகிரி செல்சியஸ் ஆக அதிகரித்தது. தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்து வருவதை தொடர்ந்து போட்டியை தற்காலிகமாக நிறுத்துவது என்ற முடிவுக்கு போட்டி அமைப்பாளர்கள் வந்தனர்.

இதனை அடுத்து வெப்பநிலை அதிகரிப்பு கொள்கை அடிப் படையில், இந்த முடிவை அவர்கள் எடுத்துள்ளனர். மூன்றாம், நான்காம் நாட்களும் மைதானத்தில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்பட்டாலும் போட்டி அமைப்பாளர்கள் வீரர்களை விளையாடுமாறு வலியுறுத்தினர். இந்நிலையில், நேற்று வெப்பநிலை தொடர் அதிகரிப்பால் போட்டிகள் நடாத்துவதை தற்காலிகமாக நிறுத்துவது என்ற முடிவை போட்டி அமைப்பாளர்கள் எடுத்துள்ளனர்.

## நியூசிலாந்து வசம் ருவென்ரி - 20 தொடர்

(வெலிங்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, கோப்பைக் கைப்பற்றியது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, 2 போட்டிகள் கொண்ட ருவென்ரி-20 தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது. இரு அணிகள் மோதிய இரண்டாவது போட்டி வெலிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிமன்ஸ் 29, பிளட்சர் 40, ராம்டீன் 55, ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 19 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரைடர் 23, ரெய்லர் 39, ராஞ்சி 51 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20



தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ராஞ்சி தெரிவானார்.

## இலங்கையில் ஆசிய கிண்ணம்

(டுபாய்)

இந்த ஆண்டுக்கான ஆசிய கிண்ணம் இலங்கையில் நடாத்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதற்காக ஆடுகளங்களைத் தயார் படுத்துமாறு ஆசிய கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

2014 ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் அது இன்னும் உறுதியாகவில்லை என ஆசிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையால் கடந்த சில மாதங்களில் மாத்திரம் 150 பேர் உயிரிழந்துள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அதனால் பங்களாதேஷில் இப்போட்டியை நடாத்துவது சந்தேகத்திற்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் தங்கியிருந்த மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களின் விடுதிக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து வீரர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆனால் தற்போது பங்களாதேஷில் காணப்படும் அரசியல் சிக்கல் நிலை நிறைவுக்கு வந்தால் ஆசிய கிண்ணக் போட்டி அங்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 பெப்ரவரி 28 தொடக்கம் மார்ச் 8ஆம் திகதிவரை ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசியக் கிண் ணம் கிரிக்கெட் இலங்கையில் நடாத்தபபட்டால் பங்களாதேஷிலிருந்து உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரும் வேறொரு நாட்டிற்கு மாற்றப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## பிறிஸ்பேனில் இன்று 2ஆவது ஒரு நாள்

(பிறிஸ்பேன்)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்றைய தினம் பிறிஸ்பேனில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முன்னிலை வகிக்கின்றது. இதேவேளை, இப்போட்டியில் வெற்றி பெற இறுதி வரை முயற்சிப்போம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அணியில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆஷஸ் தொடரில் அடைந்த தோல்வி குறித்து நாம் இப்பொழுது சிந்திக்கவில்லை. ஒரு நாள் தொடரை எவ்வாறு கைப்பற்றிக் கொள்வது என்பதே எங்களுடைய நோக்கமாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திணறுகிறது இலங்கை



(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி திணறி வருகின்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறு திப் போட்டி நேற்று சார்ஜாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறி வருகின்றது. இறுதியில் நேற்றைய ஆட்டம் நிறுத்தப்பட 20 ஓவர்கள் இருக்கையில், இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சங்கக்கார 52, மஹேல ஜெயவர்த்தன 47, குணவர்த்தன 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். இத்தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





அகில இலங்கை பாடசாலை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை வென்றது. சம்பியன் பட்டம் வென்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் நேற்று பாடசாலை சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர். பான்ட் வாத்திய இசையுடன் வீரர்கள் வரவேற்கப்பட்டு பாராட்டு விழா நடாத்தப்பட்டது. கல்லூரி அதிபர் வண. ஜெறோம் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தினர். அனுராதபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் திரு கோணமலை சென். ஜோசப் கல்லூரி அணியை வீழ்த்திய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## அல்வாய் நண்பர்கள் கால்பந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

(அல்வாய்)

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டவாது சுற்றுக்கு யங்கமன்ஸ், வல்வை, கலைமதி, வதிரி பொம்மர்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டி நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நான்கு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் குடத்தனை சென். பீற்றர்ஸ் அணியும் வதிரி பொம்மர்ஸ் அணியும் மோதின. இதில் பொம்மர்ஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நக்கீரன் அணியும் யங்கமன்ஸ் அணியும் மோதின. இதில் யங்கமன்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் றேஞ்சர்ஸ் அணியும், வல்வை அணியும் மோதின. இதில் வல்வை அணி 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் கலைமதி அணியும், உதயதாரகை அணியும் மோதின. இதில் கலைமதி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன. போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதும் வழங்கப்படவுள்ளதாக போட்டி அமைப்பாள்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (93)

## மின்னல் வேகக் கூடைப்பந்து கிண்ணம் வென்றது ஜொலிஸ்ரார்



(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மின்னல் வேகக் கூடைப் பந்தாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்ட.து.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மின்னல் வேகக் கூடைப்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்கு கொண்டன.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. இருப்பினும் பிற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய ஜொலிஸ்ரார் அணி 24-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தயாளன் கலந்து கொண்டு கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். (48,93)

## கிண்ணம் வென்றது மட்டுவில் ஐங்கரன்

சாவகச்சேரி லிபோரியார் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் ஐங்கரன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. சாவகச்சேரி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் லிபோரியார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 14ஆம் திகதி லிபோரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மட்டுவில் ஐங்கரன் அணியும், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இதில் 3-0 என்ற நேர் செட் கணக்கில் மட்டுவில் ஐங்கரன் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் சிறந்த வீரனாக மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தின் எஸ்.சதீஸ்,தொடர் ஆட்ட நாயகனாக மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தின் எஸ்.வினோ ஆகியோர் தெரிவானார்கள். இந்நிகழ்வில் விருந்தினர்களாக புனித லிபோரியார் ஆலய பங்குத் தந்தை யோசப் பிரான்சிஸ், சாவகச்சேரி நகர பிதா தேவ சகாயம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர். (48, 93)





விளையாட்டு செய்திகள்

## பருத்தித்துறையில் நாளை வலய மட்ட சதுரங்கம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட சதுரங்கப் போட்டி நாளைய தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள வீர,வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (93)



# யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியல்லே...

**- எஸ்.எம்.எம்.பஷீர கட்டுரையிலிருந்து.**


அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குரிய உள்ளூராட்சி ஆணையாளராக எம்.வை.சலீம் எனும் முஸ்லிம் ஒருவரை இலங்கை அரசாங்கம் நியமித்ததைப் பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தங்களின் ஆட்சேபனையை கிழக்கு மாகாண ஆளுனருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இந்த செய்தி முஸ்லிம் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக ஏற்படுத்திய எதிர்ப்பலைகளை கண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முஸ்லிம் ஒருவரை நியமிப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், அந்த அமைச்சில் வேறு ஒரு இனத்தைச் சேர்ந்த அதிகாரி இருக்க வேண்டும் எனறே கோரினோம் என விளக்கம் வேறு அளித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல முஸ்லிம்கள் சரியாக தங்களின் கோரிக்கையை விளங்கிக் கொள்ளவில்லை என்பது போலவும், முஸ்லிம்களுக்கு நாங்கள் காலங்காலமாக உரிமைக் குரல் கொடுத்தவர்கள் எங்களைப் பிரித்து பார்க்காதீர்கள் என்றும், ஒரு படி மேலே சென்று (அஞ்) ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை எனும் கிழக்கு மாகாண தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் 1915ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரங்களின் பொழுது சேர். பொன்னம்பலம் ராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தார்கள் என்று ஒரு நவீன வரலாற்றுப் பாடத்தை நடத்தி. இருக்கிறார்.

இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட ஒருவுரை, முஸ்லிம்களை தமிழர்கள் தான் என்று வாதிட்ட ஒரு-வரை, இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களை உருவாக்கிய தமிழ் தலைவர்களை (அஞ்) ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை முஸ்லிம்களின் உரிமைக்கு குரல் கொடுத்தவர்கள் என்று சுட்டிக் காட்டி உள்ளார்.

(அஞ்)ஞானமுத்து உட்பட்ட தமிழ்த் தலைவர்கள் யாரும் முஸ்லிம்களை புலிகள் இனச் சுத்திகரிப்பும் இன சம்ஹாரமும் செய்த பொழுது உரிமைக் குரல் கொடுக்கவில்லை. கிழக்கிலே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே அவ்வப்பொழுது சமூக, காணி, பாதுகாப்புப் பிரச்சினைகளைப் பற்றி நீதியான முறையில் குரல் கொடுக்கவில்லை. ஆனால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் அவ்வப்பொழுது எங்காவது முட்டிக் கொள்ளும் பொழுது மட்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முதலில் குரல் கொடுக்கிறார்கள். அதில் இவர்கள் முஸ்லிம் தலைவர்களையும் இப்பொழுது முந்திக் கொள்கிறார்கள். எரிகிற வீட்டில் பிடுங்குகிறது இலாபம் தானே!

ஒரு முஸ்லிம் அல்லாத வேறு இனத்தைச் சேர்ந்தவரை நியமியுங்கள் என்பதன் பொருள் என்ன. முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவரை நியமிக்காமல் ஒரு சிங்களவரையோ அல்லது ஒரு தமிழரையோ நியமியுங்கள், அல்லது இப்பொழுது உள்ள முஸ்லிம் அல்லாதவரையே அப்பதவியில் நீடிக்கச் செய்யுங்கள் என்பதாகும். ஒரு பெயர் குறிப்பிட்ட முஸ்லிம் உத்தியோகத்தர் உயர் நிர்வாக பதவியில் நியமிக்கப்படுவதனை அறிந்த உடனே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர் ஒருவ்ரை அப்பதவிக்கு நியமியுங்கள் என்று கேட்டிருந்தால் அது தமிழர்களின் அரசியல் உரிமையின் பாற்பட்டதே. ஆனால் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படுகிறார் என்பதைவிட வெளிப்படையாக ஒரு சிங்களவர் நியமிக்கப்படுவதை வரவேற்கும் விதத்தில் கோரிக்கை விடுவது



அவர்களின் வக்கிரமான இனவாதம் தவிர வேறில்லை.

சென்ற ஜனாதிபதித் தேர்தலில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரித்த கூட்டமைப்பினர் அவரை எதிரியாகக் காணவில்லை, மாறாக தமது ஆபத்பாந்தவராக கண்டனர். இந்த அரசியல் அபத்தம் எப்படி முன்னாள் ஜே.வீ.பியினரைக் கூட பாதித்தது என்பது சுவாரசியமானது.

ஜே.வி.பி யிலிருந்து பிரிந்து சென்ற சோசலிச கட்சி மற்றும் சம உரிமை இயக்கம் ஆகியவற்றின் அரசியல் உயர்பீட உறுப்பினரும், ஜே.வி.பியின் ஆரம்பகால உறுப்பினருமான குமார் குணரத்தினம் தனது நேர்காணல் ஒன்றில் பின்வருமாறு கூறுவதைக் கொண்டே இதனை நன்கு புரிந்து கொள்ளலாம்.

“2010ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்க கூடாது என்ற நிலைப்பாட்டை நான் கட்சி உயர்பீட கூட்டத்தில் முன்வைத்தேன். 1971லும், 1988 காலப்பகுதியிலும் ஜே.வி.பி இராணுவத்திற்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை நடத்திய போது எமது தோழர்களை அழித்தவர்களில் முக்கியமானவர் சரத் பொன்சேகா, அவரை எப்படி ஆதரிக்க முடியும் என வாதிட்டேன்.

அதற்கு ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச என்னைப்பார்த்து கேட்டார், ரி.என்.ஏ முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள், அப்படி இருக்கும் போது நீ எதற்காக எதிர்ப்பு காட்டுகிறாய் என கேள்வி எழுப்பினார்.


என்னால் அதற்கு பதிலளிக்க முடியாமல் போய்விட்டது. ஆனாலும் கட்சி சரத் பொன்சேகாவை ஆதரிப்பதென முடிவெடுத்த பின் மௌனமாக இருந்து விட்டேன். இருந்த போதிலும் ஜே.வி.பியும், சரி தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சரி சரத் பொன்சேகாவை ஆதரித்தது தவறான ஒரு முடிவு என்றுதான் நான் சொல்வேன்...”

அந்த வகையில் ஜே.வீ.பி யினரின் அரசியல் வங்குரோத்துத்தனமும் மிகவும் துல்லியமாகவும் வெளிப்பட்டது. எதிரியின் எதிரிதான் நண்பர் என்பார்கள், ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வீ.பி யினரும் எதிரியின் எதிரி மட்டுமல்ல தங்களின் இரு எதிரிகளில் ஒருவரை நண்பராக்கி அடுத்தவரை அடிப்பது எனும் அரசியல் அயோக்கியத்தனத்தை செய்தவர்கள்.

தமிழ் தேசிய வாதத்தின் “ஜனநாயக” போராட்ட அரசியலில் முஸ்லிம்களை நசுக்குவதும் நாசூக்காக பாவிப்பதுமான விசச் சக்கரம் தமிழர்களின் தேசியவாத அரசியல் என்றும் வரலாற்றில் மாறுபடவே இல்லை.

இந்த குறும் இனவாத தமிழ் தேசிய அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் குறித்து இன நல்லெண்ணத்தை கட்டி எழுப்ப விரும்பும் சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வரலாற்றுப் பாடமாகும்.

## பேஸ்புக்கில் இணைப்புகளை மட்டும் நீக்க...




**பே**ஸ்புக் தரும் சிறந்த ஒரு வசதி, நம் நண்பர்களுடன் உடனடியாகச் செய்திகளை அனுப்பிப் பதில்களைப் பெறுவதாகும். இன்ஸ்டண்ட் மெசேஜ் வசதி என இதனை அழைக்கிறோம். இவ்வாறு ஒருவருடன் அரட்டை அடிக்கையில், செய்தி ஒன்றை அல்லது இணைப்பாக படம் ஒன்றை அனுப்புகிறோம். சில வேளைகளில் தவறான நபருக்கு இவற்றை அனுப்பிவிடுவோம். அப்படியானால், அந்த செய்தியை மட்டும், அல்லது இணைப்பை மட்டும் நீக்க நாம் விரும்புவோம். ஆனால், பேஸ்புக் மொத்தமாக முழுமையான உரையாடல் அனைத்தையும் நீக்கிவிடும். நாம் விரும்பும் வேண்டாதவற்றை மட்டும் நீக்க முடியாதா? என்ற கேள்வி நம் மனதில் எழும். நீக்கலாம்.

இதனை மேற்கொள்ள, முதலில் சம்பந்தப்பட்ட நண்பருடன் மேற்கொண்ட முழு உரையாடலையும் விண்டோவில் கொண்டு வர வேண்டும். இதற்கு, அந்த நண்பருடனான பொப் அப் விண்டோவில் தரப்பட்டிருக்கும் உரையாடல் விண்டோவில் உள்ள. கியர் சக்கரத்தில் கிளிக் செய்திட வேண்டும். இதில் See Full Conversation என்பதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இங்கு, நீக்க விரும்பும் குறிப்பிட்ட உரையாடல் செய்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர், வலது மேலாக உள்ள யுஉவழைளெ என்னும் பட்டனைக் கிளிக் செய்திட வேண்டும். இங்கு கிடைக்கும் மெனுவில் “Delete Messages“ என்னும் பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதனைத் தேர்ந்தெடுத்தவுடன், ஒவ்வொரு மெசேஜ் அருகேயும் ஒரு செக் பொக்ஸ் காட்டப்படும். இனி, நீங்கள் நீக்க விரும்பும் மெசேஜ் அருகே உள்ள செக் பொக்ஸில் டிக் அடையாளம் ஒன்றை அமைக்கவும். அடுத்து கீழாக உள்ள Delete பட்டனை அழுத்தவும். இப்போது பேஸ்புக் இறுதியாக உங்களுக்கு அந்த மெசேஜை வைத்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தினை சிறிய கேள்வி மூலம் காட்டும். தொடர்ந்து மெசேஜை நீக்க வேண்டும் என முடிவு செய்தால், “Delete messages“ பட்டனை அழுத்தி, மெசேஜை நீக்கவும்.

## துறத்தல்



**ஓ**ர் இளந்துறவி வயதில் முதிர்ந்த துறவியைச் சந்தித்தார். தன்னைப் பற்றி இளந்துறவி சொல்ல ஆரம்பித்தார். சிறுவ-னாக இருந்தபோதே பக்தி நூல்களைக் கசடறக் கற்றது, வயதில் பெரியவர்களுடன் தத்துவ வாத-பிரதிவாதங்களில் ஈடுபட்டு அவர்களை வென்றது, யோ-காசனம் முதலான அனைத்து கலைகளையும் கற்று வல்லவரானது, எவ்வளவோ அழகான பெண்கள் தம்மிடம் பழக வந்தாலும் அவர்களை விட்டு ஒதுங்கி நெருப்பென வாழ்வது என எல்லாவற்றையும் இளம் துறவி சொல்லச் சொல்ல புன்சிரிப்போடு கேட்டுக் கொண்டிருந்தார் மூத்த துறவி.

“சுவாமி... நான் துறவியாகத் தகுதியானவன்தானே?” என்று கேட்டார் இளம் துறவி.

“உனக்கின்னும் அந்தத் தகுதி வரவில்லை” என்றார் பட்டென்று மூத்த துறவி.

“ஏன் சுவாமி?”

“நான்... நான்... என எப்போதும் உன்னைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறாயே. “நான்” என்பதைத் துற. துறவியாவாய்?” என்றார் மூத்த துறவி.

# மீள் இணக்கம்

சுகு – ஸ்ரீதரன்

இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் பரந்து கலந்து வாழ்ந்தாலும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்று இந்த நாடு மனோரீதியாக பிளவு பட்டுப் போய்க் கிடக்கிறது. பிளவு படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை சமூகங்களை ஜனநாய அடிப்படையில் மனோரீதியாக ஒன்றிணைப்பதில் பாரிய அலட்சியம் காட்டப்படுகிறது. சிறுபான்மையினரை கண்காணிப்பில் வைத்திருத்தல், அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளை கூர்ந்து அவதானித்தல் என்பன யுத்தத்திற்குப் பிந்திய பெரும் போக்காக காணப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவதிலும் சரி,

இராணுவப் பிரசன்னத்தை குறைப்பதிலும் சரி, சமகால உலகின் முன்னேறிய நாடுகளின் விடயங்களை இங்கு கருத்திற்கெடுக்கவோ புரிந்து கொள்ளவோ தவறுகிறார்கள்.

கனடாவில் கியூபெக் மாநிலம் இணைந்திருக்கவேண்டுமா பிரிந்திருக்க வேண்டுமா என்ற வாக்கெடுப்பில் கியூபெக்கியர்கள் இணைந்து வாழ்வதற்கு வாக்களித்தார்கள்.

பிரித்தானிய ஸ்கொட்லாந்து அரசாங்கமாக பாராளுமன்றத்தையே கொண்டிருக்கிறது. சுவிற்சலாந்து போன்ற நாடுகள் பல்வேறு மொழிப்பிரிவினருக்குமான கன்டோன்களைக் கொண்டிருப்பதோடு மிகச்சிறிய இராணுவத்தையும் கொண்டுள்ளன.



இந்தியா பல்வேறு இனமொழி பண்பாட்டு சமூகங்களை ஜனநாயக வழியில் இணைத்து வைத்திருக்கிறது.

இந்தியாவின் மாநில அதிகார பகிர்வின் பரிணாமம் மாநிலக்கட்சிகளே இந்திய ஆட்சியினைத் தீர்மானிக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கின்றன.

சேர்ந்து வாழ்வதற்கான மன நிலையைக் கட்டியெழுப்பாமல் பிரிவினைவாதம் மதங்களின் செல்வாக்கு பற்றி இனவாதக் கூச்சல்களைக் கிளப்புகிறார்கள்.

170 வருடங்களுக்கு இந்த நாட்டில் வாழ்ந்த மலையக மக்களுக்கு அவர்கள் வாழும் லயன் அறைகள் கூடச் சொந்தமில்லை. இந்த நாட்டில் ஆகக் குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அவர்களே.

மதநல்லிணக்கத்தை அறத்தைப் போதிக்க வேண்டிய துறவிகள் பலசேனாக்களை உருவாக்கி முஸ்டியை உயர்த்தி நிற்கிறார்கள்.

130 வருடங்களுக்கு மேலாக இந்த அரசியல் இன்றளவில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்கு வகிக்கப்போவது இந்த நாட்டின் மனித வளமே. இந்த வளம் தனது முழு சக்தியையும் பிரயோகிக்க கூடிய வகையில் தன்னம்பிக்கையையும் சுதந்திரத்தையும் கொண்டதாக இருந்தால் தான் உருப்பட முடியும்.

இந்த நாட்டில் இருந்து ஒன்றரை மில்லியன் மக்கள் புலம்பெயர்ந்து போனது ஒன்றும் தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இதற்கு காரணமாக இருந்தன.


வெறுப்பும் பகையும் வறுமையும் இவ்வளவு பெருந்தொகையில் ஆட்களை நாட்டை விட்டு விரட்டியது. என்னதான் சொன்னாலும் இந்த நாட்டில் ஜனநாயகம் மோசமாகப் பழுதடைந்திருக்கிறது. கண்ணுக்குத் தெரிந்த தெரியாத அச்சுறுத்தல்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

இராணுவமயமாக்கல் பயங்கரவாத தடைச்சட்டம் போன்றன உடனடியாக காலாவதியாக வேண்டும். இந்த நாட்டின் சகல மக்கள் தொடர்பிலும் அபகீர்த்தி மிக்க இரத்தம் தோய்ந்த சட்டம் அது. சக சமூகங்கள் மீது வெறுப்பு உமிழும் சக்திகள் அரசினால் போசிக்கப்படக் கூடாது.

சமூகங்கள் நெருங்கி வருவதற்கு பீதி கொள்ளாமல் ஒன்றையொன்று அனுசரித்து வாழ்வதற்கான நிலை கட்டியமைக்கப்படவேண்டும்.

# மணிரத்னத்தை புரிந்து கொள்ளுதல்

அந்த இரண்டு நண்பர்களுக்கும் சினிமாதான் கனவு. இரண்டு பேர் மட்டுமில்லை அவர்களது குழுவில் இதே கனவோடு இன்னும் சிலரும் உண்டு. கையில் வைத்திருக்கும் காசுக்கு ஏற்ப கடையில் தேநீர் குடித்துக் கொண்டே பேசும் நண்பர்கள் குழாம் அது.




அதில் ஒருவர் எம்.பி.ஏ முடித்துவிட்டு மும்பையில் ஆலோசகராக இருந்தவர். சினிமாவுக்குப் போகலாம் என்று வேலையை விட்டுவிட்டு சென்னை வந்துவிட்டார். எம்.பி.ஏ படித்தவர் அல்லவா? மிகத் திட்டமிடுதலுடன் வேட்டையைத் தொடங்கினார்.

அவரது நண்பருக்கு ஒளிப்பதிவாளர் ஆக வேண்டும் என்று ஆசை. அந்த நண்பரிடம் ஸ்கூட்டர் இருந்தது. இரண்டு பேரும் இந்த ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு சென்னை நகரின் முக்கியமான சினிமா நிறுவனங்களை அணுகிக் கொண்டிருந்தார்கள். வாய்ப்புத் தேடி போன இடம் அத்தனையுமே அந்தக் காலத்து பெருந்தலைகள். மகேந்திரன், பாலச்சந்தர், பார்திராஜா, கமலஹாசன் என்று. எதுவும் சரியாக அமையவில்லை. ஆனால் வைத்திருந்த கதைக்கு தயாரிப்பாளர் கிடைத்துவிட்டார். “டைரக்டரும் புதுசு ஒளிப்பதிவாளரும் புதுசு... பயமா இருக்கே” என்று தயாரிப்பாளர் தயங்க, பாலுமகேந்திராவை ஒளிப்பதிவாளராகச் சேர்த்துக் கொண்டு முதல் படத்தை இயக்கிவிட்டார். அதுவும் கன்னடத்தில். அந்த இயக்குனர் மணிரத்னம். அவருடன் சுற்றிக் கொண்டிருந்த ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம்.

இதெல்லாம் நடந்தது 1980களில். மணிரத்னத்தின் முதல் கன்னட படமான “பல்லவி அனுபல்லவி” வெளிவந்த ஆண்டு 1983. அதன்பிறகுதான் - “பகல்நிலவு”வில் ஆரம்பித்து “கடல்” வரைக்கும். பகல்நிலவுக்கு முன்பாக “உணரு” என்ற ஒரு மலையாளப்படத்தையும் இயக்கியிருக்கிறார்.

யாரிடமும் அஸிஸ்டெண்ட் டைரக்டராகக் கூட இல்லாமல் சினிமாவில் கொடிகட்டிய ஜாம்பவான். அவர் பற்றிய புத்தகம் “மணிரத்னம் படைப்புகள்: ஓர் உரையாடல்”. ஐந்நூறு பக்கங்கள். கிழக்கு பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. “Conversation with Maniratnam“ என்று ஏற்கனவே ஆங்கிலத்தில் வந்த புத்தகம் இது.

புத்தகம் முழுவதுமே மணிரத்னத்திற்கும், பரத்வாஜ் ரங்கனுக்கும் இடையிலான உரையாடல்கள்தான். மணிரத்னத்தின் ஒவ்வொரு படத்தையும் முன் வைத்து பேசுகிறார்கள். இந்தப் பேச்சு வழியாகவே மணிரத்னத்தின் வாழ்க்கை, அவரது சினிமா அனுபவங்கள், சினிமாப்புள்ளிகளுடனான அவரது பழக்கம் என்று விரிகிறது. உண்மையில் இந்த உரையாடலே ஒரு சினிமா பார்ப்பது போலத்தான் இருக்கிறது. மணிரத்னம் இந்தப் புத்தகத்திற்கு எத்தனை பலமோ அதே அளவு பலம் பரத்வாஜ் ரங்கனின் கேள்விகளும் சினிமா பற்றிய அவரது புரிதல்களும். அந்த மனிதரிடம் ஏகப்பட்ட சரக்கு இருக்கிறது.

ஏ.ஆர்ரஹ்மான் முன்னுரையுடனான இந்தப் புத்தகத்தில் சுவார்ஷயமாகப் பலநூறு சங்கதிகள்.

மௌனராகம் வெளிவந்த பிறகு ஒரு ஹிந்திப்படத்தின் வீடியோ கசட்டை முக்தா சீனிவாசனிடம் கொடுத்து மணிரத்னத்திடம் சேர்ப்பிக்கச் சொன்னாராம் கமல்ஹாசன். அந்த ஹிந்திப்படம் மணிரத்னத்துக்கு பிடிக்கவில்லை. அதுவுமில்லாமல் ரீமேக் செய்வதில் தனக்கு விருப்பமில்லை என்று முக்தாவிடம் சொல்லியிருக்கிறார். “அதை நீங்களே கமலிடம் சொல்லிவிடுங்கள்” என்று முக்தா அழைத்துப் போகிறார். “சரி ரீமேக் வேண்டாம். வேறு எந்தக் கதையைச் செய்யலாம்?” என்று கமல் கேட்கிறார். “வரதராஜ முதலியார்” என்று மணிரத்னம் சொல்ல உருவான படம்தான் நாயகன். தனது முதல்படத்தில் கமலோடு சேர முயன்று முடியாமல் நாயகனில் கை கோர்க்கிறார்.

இன்னொரு குட்டித் தகவல். மணிரத்னத்தின் முதல் கன்னடப்படத்திற்கு இளையராஜாதான் இசை. அப்பொழுது தான் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தில் ஐந்தில் ஒரு பங்கு சம்பளத்தை மட்டுமே வாங்கிக் கொண்டு இசையமைத்துக் கொடுத்திருக்கிறார்.

- வா.மணிகண்டன் -

கரப்பான் பூச்சிகளை அழிக்கவே முடியாது என்று சொல்வார்கள். எந்தச் சூழ்நிலையிலும் உயிர் வாழும் திறன் அவற்றுக்குண்டு.

கரப்பான் பூச்சிகளை அழிப்பதற்காக இனிப்புக் கலந்த நச்சுப் பொருட்களைப் பயன்படுத்தினார்கள்.



# இனிப்பின் பகைவர்கள்!

ஆரம்பத்தில் அவற்றைத் தின்ற கரப்பான் பூச்சிகள், சிறிது நாளில் இனிப்பைக் கண்டதும் விலகிப் போய்விடுகின்றனவாம்.

இதைக் கண்டுபிடித்தவர்கள், அமெரிக்காவின் வடக்கு கரோலினா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள். அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரிய ஆகிய நாடுகளிலிருந்து 19 வகையான கரப்பான் பூச்சிகளை ஆய்வு செய்து இதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்படி இனிப்புப் பொருட்களைத் தவிர்க்கும் கரப்பான் பூச்சிகளின் மரபணுக்களில் மாற்றம் ஏற்படவும், அதனால் வருங்கால இளைய தலைமுறைக் கரப்பான் பூச்சிகள் இனிப்பின் தீவிரமான பகைவர்களாக மாறவும் வாய்ப்பு உள்ளது என்கிறார்கள் அவர்கள்.

# கரும்புச் செய்திகள்

✤ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சாணக்கியரும் சுஷ்ருதரும் கரும்புக் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

✤ புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி ஆகிய பழந்தமிழ் இலக்கியநூல்களில் கரும்பு குறித்து கூறப்பட்டுள்ளன.

✤ இந்தியாவுக்கு படையெடுத்து வந்த அலெக்சாண்டர் தமது நாட்டுக்கு திரும்பிப்போகும் போது கரும்பை “இனிப்பான நாணல்” என்று போற்றி அவரது நாட்டில் நட்டு வளர்க்க ஏற்பாடு செய்தார்.

✤ அதியமான் காலத்திலேயே கரும்பிலிருந்து வெல்லம் தயாரிக்கும் தொழில் நுட்பம் நடைமுறையில் இருந்தது தெரிய வருகிறது.

✤ கி.பி.9ஆம் நூற்றாண்டில் எகிப்தில் கரும்பு பயிர்செய்தல் அறிமுகமானது.

✤ நூறு கிலோ கரும்பிலிருந்து ஏழு முதல் பத்து கிலோ சர்க்கரை கிடைக்கிறது.

✤ கரும்பில் பலவகை உண்டு அவை செங்கரும்பு, நாமக் கரும்பு, கறுப்புக்கரும்பு, பேய்க் கரும்பு, ஒல்லிக்கரும்பு, வரிக்கரும்பு, குண்டுக்கரும்பு, ஆலைக்கரும்பு முதலியவை ஆகும்.




# வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்க வளர்ச்சிப் படிகள்

யாழ். குடாநாட்டின் வட்டுக்கோட்டை பிரதேசத்தில் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் எனும் அமைப்பு பல இந்து அமைப்புகளுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றது. இவ் அமைப்பு தனியே சமயப்பணியோடு மட்டும் நின்றுவிடாது காலத்தின் தேவையறிந்து சமூக, கல்விப் பணிகள் பலவற்றிலும் ஈடுபட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி சுயதொழில் முயற்சிக்கான உதவி , அங்கவீன மாணவர்களுக்கான உதவி , விதவைகளுக்கான வாழ்வாதார உதவிகள், குடிநீர் விநியோகம் என பல வழிகளில் சேவையாற்றி வருகிறது. கடந்த வருடத்தில் மட்டும் சுமார் முப்பத்தெட்டு இலட்சம் ரூபா நிதியினை மக்களின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிட்டுள்ளது.

இவர்களது கல்விப் பணியினை நோக்கும் போது



முல்லைத்தீவு மாவட்டத்திலே வசிக்கின்ற தாய் தந்தையரை இழந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

மேலும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மருத்துவபீட மாணவர்கள் நான்கு பேர், கலைப்பீட மாணவர்கள் பத்துப் பேருக்கு கற்றலுக்கான உதவித் தொகை வழங்கி வருவதோடு கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களின் கல்விக்கான செலவினையும் சங்கம் ஏற்றுள்ளது. சங்கத்தின் நிதியூட்டலில் கல்வி கற்ற பத்து மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர். மேற்படி சங்கம் மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபா நிதியினை கல்வி ஊக்குவிப்புக்காக மட்டும் செலவிட்டு வருகிறது.

சமூகப் பணிகளாக வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென சுயதொழில் முயற்சிக்கு உதவி புரிந்துள்ளது. இதனூடாக தையல் இயந்திரம் , உணவு தயாரிக்கும், பதனிடும் இயந்திரம் போன்றவற்றை வழங்குவதுடன் கோழி வளர்ப்புக்கென கூடுகளை வழங்கி வருகின்றது. ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகள் , ஊன்றுகோல்கள் , கட்டில்கள் வழங்குவதுடன் மருத்துவச் செலவுக்கு என பண உதவியும் வழங்கப்படுகிறது.



குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென பரந்தன், திருமுறிகண்டி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் நான்கு குடிநீர் கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் இனிய வாழ்வு இல்லம், அன்பு இல்லம், பாரதி இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள சிறுவர்களின் தேவைக்கென பல்வேறு உதவிகளை வழங்குவதுடன் அவர்களின் மன வடுக்களைப் போக்கி ஆற்றுப்படுத்தும் முகமாக பல பணிகளை ஆற்றி வருகின்றது.



வடமாகாணத்திலேயே முதன்முதலாக ஐந்து வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியினை அறிமுகப்படுத்தி நடாத்தியதுடன் வேறு பல விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தியுள்ளது.



கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு என இருபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கி கிழக்கு மக்களுக்கும் தமது உதவிகளை விஸ்தரித்தனர். கடந்த சுனாமி பேரலை அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் முப்பது இலட்சம் ரூபா நிதி உதவியினை வழங்கியதுடன் சங்க அங்கத்தவர்கள் சரீர·உதவிகளையும் புரிந்தனர்.


இந்த வருடம் சங்கத்தினது உதவிகளைப் பெறுவதற்கு ஆறு பல்கலைக்கழக மாணவர்களும் ஐம்பது பாடசாலை மாணவர்களும் உதவிகோரி விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களது விண்ணப்பங்கள் பல்துறை விற்பன்னர்களினால் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமானவர்களாக இனங் காணப்படுபவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



அல்லல்பட்டவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் இந்த செயற்பாடுகளுக்கு புலம் பெயர்ந்து வாழும் சங்க முன்னாள் அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், சங்க அங்கத்தவர்கள் நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.








தொகுப்பு: கார்த்திகேயன்

# தீவகத்தின் அபிவிருத்தி மேம்பாடு அமைச்சரின் பங்களிப்பு காத்திரமானது

## ஊர்காவற்றுறை பிரதேசசெயலர்



(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் பங்களிப்பு காத்திரமானதாகும்.என ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

எழுவைதீவிற்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமையேற்று உரையாற்றும் போதே பிரதேசசெயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது தீவகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருபவர்.

தீவகத்திலே அனைத்துப் பகுதிகளும் அமைச்சருக்கு நன்கு தெரியும். ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் அவர் நன்கறி வார். பெயர் குறிப்பிட்ட பல பகுதிகளின் நிலைமைகளை அவர் என்னிடம் கேட்டறிந்து கொள்வதுண்டு.

மழைகாலமாகட்டும் அல்லது கோடைகாலமாகட்டும் அக்காலப் பகுதிகளுக்கேற்ப தீவகப் பகுதி மக்களின் நன்மைகருதி முன்னெடுக்கப்படக்கூடிய வேலைத திட்டங்கள் குறித்துக்கலந்துரையாடுவார்.


அவரது இந்த அக்கறையை நான் பலமுறை உணர்ந்துள்ளேன். அந்தவகையில் இப்பகுதி மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ள அமைச்சரையே இப்பகுதி மக்கள் நம்ப வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், மின்வழங்கல் திட்டத்திற்கு ஒத்துழைத்த மின்சார சபை அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் அப்பகுதி மக்கள் சார்பில் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மின்வசதிகள் இதுவரையில் கிட்டாத பகுதிகளுக்கு விரைவில் அவ்வசதி செய்து தரப்படுமென உறுதியளித்த அமைச்சர் இப்பகுதி இறங்குதுறை உட்படப் பல்வேறு புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

எழுவைதீவு கடற்றொழிலாளர்கள் அமைச்சரிடம் இந்திய இழுவைப் படகுகளின் மூலமான தமது தொழில் பாதிப்புகள் தொடர்பில் எடுத்துக் கூறினர். இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சினையை உடன் தீர்ப்பதாக தேர்தலில் வாக்குறுதி வழங்கி, உங்களது வாக்குகளை பறித்துக் கொண்டு மாகாண சபையைக் கைப்பற்றியவர்கள் இது வரையில் எந்தவொரு நடவடிக்கையும் இவ்விடயம் தொடர்பில் எடுக்கவில்லை. மக்களின் பிரச்சினைகள் தீரக் கூடாது என்பதிலும், தீர்ந்தால் தங்களுக்கு சுய அரசியல் இல்லை என்பதிலும் இவர்கள் விழிப்பாக இருந்து செயற்பட்டு வருவதை உணர்த்திய அமைச்சர் கடற்றொழிலாளர்களது பிரச்சினை தொடர்பில் விரைவில் உரிய தீர்வுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஊர்காவற்றுறை பிரதேசசபை பிரதிதவிசாளர் அல்பேட், யாழ். மாவட்ட மின் அத்தியட்சகர் ஞானகணேசன், மின் அத்தியட்சகர் அருள்நாதன், மின்பொறியியலாளர் திருமதி கமலலோஜினி, உதவி மின் பொறியியலாளர் பவானந்தராஜா மற்றும் பிரதேச சபை பணியாளர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



வெள்ளி நற்சிந்தனை...

# பகட்டுக்கு மதிப்பு!

சோழனின் அவையிலே கம்பர் தலைமைப் புலவராக கொலுவீற்றிருந்தார்.அரச வைக் கவிஞராக அதற்குரிய ஆடம்பரங்கள் அணிவகைகள் முதலியவற்றுடன் விளங் கினார். அரசனிடம் தனிப்பட்ட செல்வாக்கும் அவருக்கு இருந்தது. அதனால், கம்பரைச் சுற்றிப் பலர் போற்றித் துதி பாடியபடியே இருந் தனர். அவர் எது சொன்னாலும் அதனைப் பாராட்டினார்கள், அதன் சிறப்பை ஆராய்வது கூட இல்லை. “கம்பனின் வாக்கு! அதன் இனிமையே இனிமை! அதன் பொருள் வளமே வளம்!” என்று வாயோயாது வியந்து வியந்து பாராட்டி வந்தனர்.

சோழன் சபையில் தமிழ் மூதாட்டி ஔவையார் வந்திருந்தபோது இப்படியொரு சம்பவம் நடைபெற்றது. கம்பரின் பாட்டொன்றை மன்னன் வியந்து பேசிக் கொண்டிருந்தான். அந்தப்பாட்டில் அத்துணைச் சிறப்பு எதனையும் காணாத ஔவையார், அந்த உரைகளைக் கேட்டு சிரித்த வண்ணம் இருந்தார். தற்செயலாக அவர்பக்கம் திரும்பிய மன்னன்முகபாவத்தை நோக்கினான். தன் கருத்தை அவர் ஏற்கவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. தங்கள் கருத்து யாதோ? எனக் கேட்டு விட்டான்.

அப்போது, ஔவையார் பாடிய செய்யுள்

வீரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்- அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

அரசவைக்கு பரிசினை நாடி வந்துள்ள புலவரின் அருகே, இருவரும் அமர்ந்து கொண்டு அவரைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கவேண்டும். அந்தப் புலவரின் பத்து விரல்களிலும், மோதிரங்கள் இருக்க வேண்டும். அவர் பட்டுப்பீதம்பரத்துடன் டாம்பீகமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்டவரின் கவிதை நஞ்சுபோலப் பிறருக்கு கேடு விளைவிப்பதாயினும், வேம்பினைப போலக் கசப்பாய் இருந்தாலும், அதுவே நல்லதென்று இந்த அவையில் ஏற்று போற்றப் பெறும் என்பது பாடலின் பொருள்.

கவிதை ஒன்றைப் பாராட்டும் போது, அதன் கண் அமைந்துள்ள சொல்நயம், பொருள்நயம் ஆகியவற்றையே கருதல் வேண்டும். புறத்தோற்றத்தை மட்டும் கருதாமல் உண்மைத் திறனை அறிந்து பாராட்ட வேண்டும்.

இந்த நிலையே இன்றைக்கும் நிலவுகிறது. வெளிமயக்கும் விளம்பரப் பெருக்கும் பிறவுமே இன்றைக்கு ஒருவருக்கு தகுதியாகக் கருதப்படுகிறது.

“ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனாடோயினும் ஆசை அறுமின்” என்று திருமந்திரம் சொல்லுகிறது. இன்று புகழாசை நாட்டைப் பிழையாக வழி நடாத்துவது வருந்தத்தக்கதாகும். உண்மைக்கு மதிப்பளிக்கக்கற்றுக் கொள்ள வேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

இந்துமதம் என்று காந்தி முன்வைத்தது இன்று நாம் புரிந்து கொண்டிருக்கும் மரபான இந்துமதம் அல்ல. காந்தி ஒரு இந்திய மதத்தைக் கட்டமைக்க முயன்றார். காந்தி ஒருவகையில் பிராமண மேலாதிக்க இந்துமதத்தைத் தனது தந்திர மொழியில் கீழ்நிலையாக்கி, தலைகீழாக தாழ்த்தப்பட்டவர்களை உள்ளடக்கிய ஒரு இந்து சமதர்ம மதத்தை உருவாக்க முயன்றார். சமதர்மம் என்பதை சோசலிஷம் என்கிற ஆங்கிலச் சொல்லிற்கானதாக நான் இங்கு ஆளவில்லை. பிராமண இந்துமதத்தின் அடிப்படையான “தர்மா”வில் இல்லாத சமநிலை என்பதை இணைத்து சம “தர்மம்” என்கிறேன். காந்தியின் இந்து மதம் அதாவது இந்திய மதம் நுட்பமாக பழமைவாத பிராமண இந்து மதத்தை ஒழித்துவிடும் என்றுணர்ந்த இந்துத்துவ அடிப்படைவாதச் சக்திகள் காந்தியைக் கொன்று தங்கள் தர்மத்தையும் மகாத்மாவையும் காத்தன என்பது வரலாறு. மகாத்மாவாகத் தொடர தான் இயற்கையாக இறக்கக்கூடாது என்று தனது மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர் காந்தி. **– ஜமாலன்**

காந்தியின் ஆகப்பெரும் கனவாக நான் கருதுவது அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசியாக தனக்குள் உருவாக்கிக் கொண்ட வேட்கை பிம்பமே. அதாவது, காந்தி தனக்குள் தன்னை உருவகித்துக்கொண்ட பிம்பம். தான் ஒரு ஏசு அல்லது முகமதுநபி போன்று இந்தியாவிற்கான ஒரு தீர்க்கதரிசியாக மாறிவிட வேண்டும் என்பதே. இப்படி எண்ணுவது சுய நலம் சார்ந்த வேட்கை அல்ல. சகமனிதர்களின் துயரம் தாங்கமுடியாத மனதின் உக்கிரம் கொள்ளும் ஒரு பிம்பம். தானற்று பிறராகுதலால் உருவாகும் ஒரு சொல்லொண்ணாத் துன்பநிலை. புத்தனுக்கு ஏற்பட்டதைப்போல, தன்னறிவு அற்ற நிலையில் உருவாகிப் படியும் வேட்கை. அந்த வேட்கை கொள்ளும் ஒரு பெருங்கனவு. அதில் உருவாகும் தன்னமைவு சமூகத்தை முன்னோக்கி நகர்த்தக்கூடியது. அது ஒரு திட்டமிட்ட செயல் அல்ல. தனது உள்மன அவசத்தில் ஒரு பேரமைதி கொண்ட மனதை உருவாக்கிக் கொள்ள முனைவது.

**– பிரேம்**


நாம் இப்போது இலட்சியங்கள் நாசமடைந்துபோன உலகில் வாழ்கிறோம். யாராவது ஒருவர் சற்றே தூய்மையானவராக இருப்பதைப் பார்த்தால் போதும், அவரை உடனே கறைப்படுத்தி நாசமாக்குகிறவரைக்கும் நமக்குத் தூக்கம் வருவதில்லை. யாரும் தூய்மையானவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்பதைப் பார்க்க விரும்புகிற காலத்தில் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு வேலைக்குப் பின்னாலும் தன்னலமே இருக்கிறது என்பதைப் பார்க்க ஏன் விரும்புகிறோம் தெரியுமா? அப்போது தான் சந்தைமயமான உலகில் எந்தவிதமான குற்றஉணர்ச்சியும் இல்லாமல் நம்மால் நிம்மதியாக வாழமுடியும் என்பதற்காகத்தான். **– விவேக் ஷான்பாக்**

நம்மிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஆனந்தத்திற்கு அடுத்தபடியாக நமக்கு அதிக ஆனந்தம் தரும் விஷயம் அடுத்தவர்களுக்கு, அவர்களிடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் சந்தோஷத்தைக் கிடைக்க விடாமல் செய்வது – பொதுவாக இது, அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வழி நடந்தேறுவது. இதன் காரணமாகவே தூய்மைவாதிகளின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருப்பவர்கள் அதிகாரம் தொடர்பான அளப்பரிய ஆர்வம் கொண்டவர்களாய் மாறுகிறார்கள். அதிகாரத்தின் மீதான அளப்பரிய ஆசை என்பது தூய்மைவாதிகள் எதிர்த்து வரும் மதுவருந்தும் வேட்கை மற்றும் அத்தகைய பிற வேறு தீங்குகளை விட பன்மடங்கு தீமை பயப்பது. ஒழுக்கமான மனிதர்களிடம் அதிகாரத்திற்கான ஆசை என்பது மற்றவர்களுக்கு நல்லது செய்யும் ஆசை என்பதான போர்வைக்குள் தன்னை ஒளித்துக்கொண்டு இருக்கிறது என்றாலும் அதன் சமூகரீதியான. பாதிப்புகளைப் பொறுத்தவரை எந்த மாற்றமுமில்லை.

**– பேர்ட்ரண்ட் ரஸ்ஸல்**

எல்லோரும் ஏன் நேர்மையை, நற்குணங்களுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ‘நற்குணங்களாக’ இச்சமூகமும், சட்டங்களும், கலாசாரமும் வரையறுத்திருப்பவற்றிற்கும் ‘நேர்மை’க்கும் தொடர்பில்லை. எல்லோருக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொதுவான நல்லது ஒன்றிருக்க முடியாது. ஒன்று உங்களுக்கு நல்லதாகப் படுவது எனக்குக் கெட்டதாகப் படலாம். ஒரு சமூகத்தில் நல்லது என்று கருதப்படுவது மற்றொரு சமூகத்தில் கெட்டதாகக் கருதப்படுகிறது. முஸல்மான்களாகிய நம்மிடையே அக்குளில் முடி வளர்ப்பது பாவம் எனக் கருதப்படுகிறது. ஆனால் சீக்கியர்களுக்கு அப்படியில்லை. கடவுள் என்று ஒன்று இருந்தால் நான் அதனிடம் இதைத்தான் வேண்டிக் கொள்வேன்: மனிதன் உருவாக்கிய சட்டங்களை உடைத்தெறி. மனிதன் உருவாக்கிய இந்தச் சிறைச்சாலைகளைத் தரைமட்டமாக்கு.

**– சதாத் ஹசன் மாண்டோ சிறுகதையில்**



சாவகச்சேரி புராதன வாரியப்பர்சிவன் கோவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீர்த்தோற்சவத்தின் போது புராதன தேர் அழிவுற்ற நிலையில் புதிய தேருக்கான அச்சு ஏற்றும் விழா ஆலய பிரதம குரு ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. விஸ்வபிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் குழுவினரால் ஆரம்ப வேலைகள் இடம்பெறுவதையும் மகோற்சவ குரு சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் ஆலய குரு ஜெயந்தி நாத சர்மாவினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் ஆலய தர்மகர்த்தா இ.கருணாகரனினால் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (படங்கள்- ஆர்.இராஜகுமார்)

# சுயகட்டுப்பாட்டைப் பேணுவதே சிறந்த ஊடகத்தின் பண்பு

## பிரித்தானிய சிரேஷ்ட பத்திரிகையாளர்



அரசாங்கத்தினால் ஊடகங்கள் கட்டுப்படுத்தப்படுவதைவிட சுயகட்டுப்பாட்டை கடைப்பிடிப்பதே சிறந்தது என்று பிரித்தானியாவின் சிரேஷ்ட பத்திரிகையாளர் இயன் பீல்ஸ் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் 10 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் நடைபெறும் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவையை நடைமுறைப்படுத்தலும் ஒழுக்க விழுமிய அறிக்கையிடலும் எனும் தலைப்பிலான சர்வதேச மாநாட்டின் முதல் நாள் அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயகட்டுப்பாடு என்பது ஊடகங்களுக்கு எவ்வாறு அவசியமோ அதேபோன்று அரசியல்வாதிகளுக்கும் அவசியமாகும். அப்போதுதான் நல்லாட்சியை நடைமுறைப்படுத்த முடியும். பிரித்தானியாவில் இடம்பெற்ற பல்வேறு ஊழல்களை வெளிக்கொண்டுவந்ததில் ஊடகங்கள் சிறந்த பங்களிப்பை வழங்கின. இது நல்லாட்சிக்கு சிறந்த உந்து சக்தியாகும்.

பிரித்தானியாவானது இவ்வாறானதொரு சுயகட்டுப்பாட்டினை கடந்த 300 ஆண்டுகளாக பின்பற்றிவருகின்றது. இதனை பின்பற்றி பல்வேறு நாடுகள் சுய கட்டுப்பாட்டு ஊடகவியலை கையாளுகின்றன. இலங்கைக்கும் அதில் பல்வேறு படிப்பினைகள் உண்டு என்றார்.

# பால் உற்பத்தியை அதிகரிக்க 20,000 பசுக்கள் இறக்குமதி

(கொழும்பு)

தேசிய பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் பசு மாடுகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதித் திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய நெதர்லாந்து அரசாங்கத்துடன் கடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

தேசியபால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 4500 பால் மாடுகளை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ள நிலையில் 2000 பால் மாடுகள் அவுஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும் 2500 பசுமாடுகள் அவுஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அதற்கு மேலாக 20,000 பசு மாடுகளை இறக்குமதி செய்ய கடன் பெறும் திட்டத்தின் கீழ் நெதர்லாந்து வங்கி ஒன்றுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடபடவுள்ளது.

*இலங்கை–மாலைதீவு இடையே*

# பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண்ணை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் மாலைதீவிற்குமிடையில் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலைதீவு பெண்களை இலங்கையிலும், இலங்கைப் பெண்களை மாலைதீவிலும் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய மடபாத்த சதுராணி என்ற இலங்கைப் பெண் மாலைதீவில் தலைமறைவாகியுள்ளார். குறித்த பெண்ணைக் கைது செய்யும் நோக்கில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலைதீவைச் சேர்ந்த சுகுர் என்ற நபரும் இந்த வர்த்தகத்துடன் தொடர்புபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் வர்த்தகம் தொடர்பிலான விசாரணை ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த 20 மாலைதீவு பெண்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

மாணவர் வீசாக்களில் மாலைதீவு பெண்களை இலங்கைக்கு அழைத்து, சொகுசு தொடர்மாடி வீடுகளில் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மசாஜ் நிலையம் ஒன்றிற்கு இலங்கைப் பெண்களை அழைத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களை மாலைதீவிற்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சின்னவெங்காயம் விலை 100 ரூபா

திருநெல்வேலிச் சந்தையில் சின்ன வெங்காயம் 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. திருநெல்வேலிச் சந்தையில் வெங்காயத்தின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சின்னவெங்காயம் கிளிநொச்சி மற்றும் கச்சேரி சந்தையில் முறையே 180 ரூபாவிற்கும் 140 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் அனைத்து சந்தைகளில் சின்னவெங்காயம் 250 ரூபாவிற்கு மேல் விற்பனை செயப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ர)

# தரணியில் புகழோடு வாழ உதவும் தைப்பூசம் இன்று



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளாகிய முருகப்பொருமானுக்குரிய சிறப்பான விரத நாள்களில் இன்றைய தைப்பூசம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்தத் தைப்பூசம் தமிழ் மக்களின் விசேட தினமாகக் கருதப்படுவதோடு தமிழ்க் கடவுள் முருகனின் திவ்ய பேரருள் கடாட்சம் பெற்று உய்வதற்கு உதவும் நாளாகவும் எண்ணப்படுகிறது.

தைமாதம் பிறந்தவுடனே முதல்நாளிலே "தைப்பொங்கல்" கொண்டாடப்படுகின்றது. இது சூரிய பகவானுக்கு வணக்கம் செய்து நன்றி செலுத்திடும் பெருவிழாவாகக் கருதப்பட்டு நம்முன்னோர்களால் பக்தி சிரத்தையோடு பொங்கிப்படைத்து வணங்கி வாழ்த்தப்படுகிறது.

தைபிறந்து அடுத்த இரண்டாம் நாள் "பட்டிப் பொங்கல்" இடம்பெறுகிறது. அதாவது நெல் வயலில் உழவர் பெருமக்களோடு சேர்ந்து பாடுபட்டுப் பயிரவளர்த்த மாடுகளுக்கு நன்றி கூறும் விழாவாக பட்டிப் பெங்கல் நடாத்தப்படுகிறது.

அதற்கு அடுத்தது இன்றைய தைப்பூசம். இது மிகச் சிறந்த ஒரு புனித புண்ணியப் பெருநாளாகும். புதிரெடுத்தல் எனும் புண்ணிய விசேட நிகழ்வு இந்தப் பூசத்திலேயே நடாத்தப்படுகிறது. மேலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகப் பெருமக்கள் இன்று தமது கடை சம்பந்தமான விடயங்களைப் "புதுக்கணக்கு" எனும் பெயரில் புதிதாக எழுதத் தொடங்குவார்கள்.

மேலும்-

இன்றைய "தைப்பூசம்" இந்தியாவிலே முருகனுக்குரிய ஆறு படை வீடுகளிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகி றது. அது தவிர மருதமலை திருப்பேரூர் முதலாவது புண்ணிய ஷேத்திரங்களிலும் வெகுவிமர்சையாகச் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அடியவர்கள் பலரும் இன்றைய தைப்பூச நன்னாளிலேயே காவடி எடுத்து நேர்த்திகள் வைத்து தமது வேண்டுதல்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று முருகனை வேண்டுவார்கள்.

அது ஒரு புறமிருக்க-

தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் சுவாமிகள் சாம்பலாகக் குடத்திலே வைக்கப்பட்டிருந்த "பூம்பாவை" எனும் பெண்ணை உயிர்ப்பித்து அற்புதம நிகழ்த்திய வேளை, "தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என்று திருப்பதிகம் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து தைப்பூசத்தின் சிறப்பும் மகிமையும் நன்கு உணர்த்தப்படுவதை நாம் காணலாம்.

மேலும்,

இந்த தைப் பூசத்திலே தான் குழந்தைகளுக்கு" ஏடு தொடங்குதல் எனும் வித்தியாரம்பமும்" கர்ணவேதனம் எனப்படும் காது குத்தலும் செய்யப்படுகின்றது.


யாழ்ப்பாணத்திலே நல்லூர் கந்தன், மாவிட்டபுரம் முருகன் பொலிகண்டி கந்தவனக் கடவை, செல்வச் சந்நிதி முதலிய முருகன குடியிருக்கும் கோவில்களில் இந்தப் பூசம் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

ஆகவே-

இன்றைய தைப்பூச நன்னாளிலே தமிழ்க் கடவுளான முருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி, சிந்தித்து வர்தித்துச் சேவித்து அவரின் திவ்ய அருட்கடாட்சத்துக்குப் பாத்திரமாகி இவ்வுலகில் சீரோடுஞ் சிறப்போடும் வாழ நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

*தெய்வத் தமிழ்ச் சுடர்*
*இராசையா ஸ்ரீதரன்*


3. 1kg வெண்டிக்காய் 52.00 ரூபாவாகும். 1kg 750g நிறையுள்ள வெண்டிக்காய்க்காக எவ்வளவு பணத்தை செலுத்த வேண்டும்? ..............................




4. $1\frac{1}{2} + 1 + \frac{1}{2}$ = ..............................

5. இத்திண்ம உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ....................

6. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ....................

7.  A யில் இருந்து B வரைக்குமான தூரம் 160m ஆகும். எனின் B யில் இருந்து C வரையுள்ள தூரம் யாது? ....................

8.  இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை? ..............

9. 10 மாம்பழங்களின் விலை ரூபாய் 95.00 ஆகும். எனின் ஒரு மாம்பழத்தின் விலை யாது? ..............

10. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு விமானம் | ரூபா 70 | 10 |
| அசையும் பொம்மை | ரூபா 120 | 03 |
| சிறிய பொம்மை | ரூபா 55 | 10 |
| விளையாட்டுக்கார் | ரூபா 27 | 21 |
| ஊதி | ரூபா 135 | 10 |

1. குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............
2. அன்றைய தினம் அசையும் பொம்மையின் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு? ..............
3. அப்பணம் ஊதிவிற்பனையால் கிடைத்த பணத்தை விட, எவ்வளவால் அதிகமானது? ..............
4. எந்தப்பொருள் விற்பனையால் குறைந்தளவு பணம் கிடைத்தது? ..............
5. ஒவ்வொரு விளையாட்டுப் பொருட்களிலும் ஒவ்வொன்றை வாங்க செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு? ..............
6. மு.ப. 9.30க்கு ஆரம்பமான ஒரு பரீட்சை மு.ப. 10.45ற்கு முடிவடைந்தது. எனின் பரீட்சை நடைபெற்ற மொத்த நேரம் யாது? ..............

**(13) அடுத்த வாரம் எங்கள் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறப்போகின்றது. என்ற தலைப்பில் கருத்து தொடர்புள்ள வாக்கியங்கள் மூன்றை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும்நான்கு சொற்களை கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இலக்கணரீதியான தொடர்பு சரியாக அமைய வேண்டும்.**

1. ..............................................................................

1) 3 5) 3 9) 1 13) 3 17) 1 21) 3 வெந்தாற் சரி 28) 3 32) 2 36) 1
2) 1 6) 2 10) 2 14) 3 18) 4 22) 2 25) 3 29) 2 33) 1 37) 2
3) 3 7) 1 11) 1 15) 1 19) 1 23) ஓட்டை சட்டியானா 26) 1 30) 1 34) 3 38) 3
4) 2 8) 2 12) 2 16) 3 20) 2 லும் கொளுக்கட்டை 27) 2 31) 3 35) 2



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னாயத்தப் பயிற்சி - 2014

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



**(1) பின்வரும் பந்தியை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பொழுது புலர்ந்தது இருள் கவிழ்ந்து மூடி இருந்த திரை மறைகின்றது. விண்மீன்களதும் தண்ணிலாவினதும் கொட்டம் ஒடுங்குகிறது. சூரியனின் வரவு கண்டு அவை ஒளிமழுங்கித் தோற்று ஓடுகின்றன. ஆலயங்கள் எங்கும் மணியொலி ஆர்க்கின்றது. பூஜைகள் நடைபெறுகின்றன. விண்மிசை வெண்ணிறமாக விளங்கிய ஆதவன் உதய கிரியில் இருந்து மேலெழுகிறான்.

1. பந்தி குறிப்பிடும் காட்சி எதுவாகும்? ..............
2. இருள் என்னும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............
3. கிரி எனும் சொல்லுக்கு ஒத்த சொல்லைத்தருக? ..............
4. தண்ணிலா என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? ..............
5. மணியொலி எங்கு ஆர்க்கின்றது? ..............
6. சூரியனின் வரவு கண்டு எவை ஒளிமழுங்கி தோற்றுப்போகின்றன? ..............
7. அஃறிணை, பன்மை, படர்க்கை, பெயர்ச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக? ..............
8. விண்மீன்கள் என்றால் என்ன? ..............
9. மேலெழுகிறான் என்பதை பிரித்தெழுதுக? ..............
10. அது எனும் சொல்லின் பன்மைச் சொல்லை தருக? ..............

**(2) பின்வரும் இணைமொழிகளின் குறைகளை பூர்த்தி செய்து எழுதுக.**

1. ஆதி .............................. (அடி, முடிவு, தொடக்கம், அந்தம் )
2. ஆய்ந்து .............................. (தோய்ந்து, காய்ந்து, வறண்டு)

**(3) கோடிட்ட சொல்லுக்கான பொருளை தெரிவு செய்து கோடிடுக.**

1. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் பாடினார்.
(மதங்கள், குலங்கள், கிளைகள்)
2. அடித்தாரைச் சொல் ஆக்கினைகள் பண்ணிடுவோம்.
(சொல்லடிகள், வேதனைகள், தண்டனைகள்)

**(4) பின்வரும் வாக்கியங்களை திருத்தி எழுதுக.**

1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தன. ..............
2. தாவரங்கள் காபனீரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றது.
..............
3. மான்கூட்டம் நீர் அருந்தின. ..............

**(5) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. தயவு செய்து செவிமடுக்கவும் ? .................... 2. நான் உள்ளே வரலாமா? ....................


**(6) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am eating .................... 2. Water Bottle ....................

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. ஔயா கடேட்ட யனவா த? ....................
2. மகே செல்லம் கெதர ....................

**(8) பின்வரும் தையல் வகைகளின் பெயர்களை குறிப்பிடுக.**


1)  .................... 2)  ....................

**(9) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கறுப்புநிறத்துடன் கபில நிறமும் கொண்ட பறவை எது?
   1. மரங்கொத்தி 2. பஞ்சவர்ணக்கிளி 3. மீன்கொத்தி 4. செண்பகம்
2. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படும் அரசிலைகள் பல கருத்துக்களை விளக்குகின்றன அதில் ஒரு கருத்தாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1. சத்தியம் 2. வாக்குறுதி 3. விடுதலை 4. காருண்யம்
3. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை பிடித்து உண்ணக்கூடியது எது?
   1. நத்தை 2. கும்பிடுபூச்சி 3. கருவண்டு 4. வெட்டுக்கிளி
4. வடமாகாணத்தில் அமைந்திராத மாவட்டம் ஒன்று.
   1. வவுனியா 2. முல்லைத்தீவு 3. யாழ்ப்பாணம் 4. மட்டக்களப்பு
5. பூ கோளத்தில் இலங்கைக்கு வடக்கே மிக அருகில் அமையப் பெற்றுள்ள நாடு.
   1. வங்களாதேசம் 2. இந்தியா 3. பூட்டான் 4. பாகிஸ்தான்
6. நல்ல நெல்லிலிருந்து பதர் நெல்லை வேறாக்குவதற்கு பயன்படுவது?
   1. குல்லம் 2. மரக்கால் 3. பரம்புப்பலகை 4. கடகம்
7. பழங்காலத்தில் தகவல்களை அறிவிப்பதற்காக பயன்படுத்தியது?
   1. பறை 2. கடிதம் 3. தந்தி 4. பெக்ஸ்
8. வாழ்க்கை வட்டத்திற்கு அமையத் தனது இனத்தை பெருக்கிக் கொள்ளும் பிராணி.
   1. நத்தை 2. இராமபாணம் 3. திமிங்கிலம் 4. நுளம்பு
9. நீர்ச்சக்கரம் ஒன்றின் சுழற்சியை அதிகரிக்கக்கூடிய வழிகளில் ஒன்று.
   1. பற்சில்லுகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
   2. பற்சில்லுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
   3. பற்சில்லுகளுக்கிடையிலான இடைவெளிகளை அதிகரித்தல்.
   4. நீர் விழும் உயரத்தின் நீளத்தைக் குறைத்தல்.
10. பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகைகளை சமைத்து உண்ணும் போது ஏற்படக்கூடிய விளைவு?
   1. போசணைத்தன்மை அதிகரிக்கும். 2. போசணைத்தன்மை குறைவடையும்.
   3. உணவு நஞ்சாகக் கூடும். 4. சுவை குறையும்.




11. வரலாற்றில் வீரம் பொருந்திய மன்னனாக கருதப்படுபவன்.
   1. துட்டகைமுனு 2. காசியப்பன் 3. முகலன் 4. பண்டுகாபயன்
12. குருதிச்சோகை நோய் ஏற்படுவதற்கு காரணம்.
   1. கல்சியம் குறைபாடு 2. இரும்புச்சத்து குறைபாடு
   3. புரதக் குறைபாடு 4. விற்றமின் குறைபாடு
13. வீட்டின் உள்ளே வளர்க்கப்படும் பிராணி
   1. பசு 2. பூனை 3. எலி 4. நாய்
14. நீரை சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப்பதார்த்தம்.
   1. குளோரின் 2. கொண்டிஸ் 3. அற்கஹோல் 4. தேங்காய்எண்ணெய்
15. மின்குமிழ்கள் இரண்டும் ஒளிரும் படி ஒழுங்கு செய்யப்பட்ட அமைப்பு எது?




(15 புள்ளிகள்)

**(10) பின்வரும் தாவரங்களுக்கான பெயர்களை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

இலைப்பசளி , நாயுருவி, ஆடாதோடை , இருவேரி , வசம்பு




1. .................... 2. .................... 3. .................... 4. ....................

**(11) வினாக்களுக்கு விடை தருக.** (04 புள்ளிகள்)

1. இலங்கையின் துறைமுகங்கள் அமைந்துள்ள இடங்கள் இரண்டைத் தருக?
   1. .................... 2. ....................
2. இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் இரண்டை தருக?
   1. .................... 2. ....................

**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.** (04 புள்ளிகள்)

1. 4cm அகலமும் 8cm நீளமும் கொண்ட மூன்று காகித அட்டைகளைக் கொண்டு அருகில் உள்ள உரு தயாரிக்கப்பட்டுள்ளது. A.B யின் நீளத்திற்கும் C.D யின் நீளத்திற்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு? ....................




2. கலன் ஒன்றில் இருந்த 5*l* தேனில் 2*l* 225*ml* தேன் பாவிக்கப்பட்டால், மிகுதியாக இருக்கும் தேனின் அளவு யாது? ....................

விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2014 - கல்விமுரசு

# தரம் 1 மாணவர்களுக்கான நேற்றைய கால்கோள்விழா



யாழ்.சென்பெனடிக் வித்தியாலயம்


சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்


கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம்


யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி


யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி


கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்

# மட்டக்களப்பில் சீரற்ற காலநிலை வெள்ளப் பெருக்கு அபாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சீரற்ற கால நிலை காரணமாக வெள்ளம் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது இரண்டு குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சை மற்றும் உறுகாமம் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள் ளன என நீர்ப்பாசனத் திணைக் களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எஸ்.டி.மோகனராஜ் தெரிவித்துள்ளார்.

உன்னிச்சை குளத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டு நான்கு அங்குலத்துக்கு நீர் பாய் வதாகவும், உறுகாமம் குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதுடன் இந்த குளத்திலிருந்து 28 அங்குலத் துக்கு நீர் பாய்கின்றது.

இந்தக் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் இக்குளங்களில் இருந்து பாயும் நீர் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சித்தாண்டி மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தாழ் நிலப் பிரதே சங்களில் வெள்ள அபாயம் ஏற்படும் என்றார்.

இதனால் தாழ் நிலப் பிர தேசங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பிரதேசங்க ளுக்கு செல்லுமாறும் மட்டக் களப்பு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தின் முந்தனையாறு பெருக்கெடுத் துள்ளதாலும் அந்த பகுதியை அண்மித்த தாழ் நிலப் பிர தேசத்தில் வெள்ள அபாயம் ஏற்படலாமெனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை எட்டு மணியிலிருந்து நேற்றுக் காலை வரைக்கும் 30 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக மட்டக் களப்பு வானிலை அவதான நிலைய அதிகாரி கே.சிவதாஸ் தெரிவித்தார்.

# சாவகச்சேரி மருத்துவமனையில் சிற்றூழியர் பற்றாக்குறை

## அம்புலன்ஸ் உதவியாளராக பெண்கள்

(யாழ்ப்பாணம்)

சிற்றூழியர் பற்றாக்குறை யில் நோயாளர் காவுவண்டி உதவியாளராக பெண் சிற் றூழியர்களே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சாவகச சேரி ஆதார வைத்தியசாலை பெண் சிற்றூழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இரவு வேளையிலும் சரி பகல் வேளையிலும் சரி நோயா ளர காவு வண்டியின் உதவி யாளராக பெண் சிற்றூழி யர்களே செல்லவேண்டியுள்ளது. ஆண் சிற்றூழியர்கள் இங்கு மிகக் குறைந்தளவிலேயே இருக்கின்றனர்.

நோயாளர் காவு வண்டியின் உதவிக்குச் செல்லும் பெண்கள் வண்டியில் ஏற்படும் கோளாறுக ளுக்கு உதவமுடியுமா? இவ் வாறு பெண்கள் செல்வது சரியா என ஆதங்கம் வெளியிட்டுள்ள னர்.

இது விடயம் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து ஆண் சிற்றூழியர்களை நிய மிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (இ)

# ஒழுக்கக் கேடான பொலிஸார் தண்டனையிலிருந்து தப்பமுடியாது

## பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

ஒழுக்கக்கேடாக நடந்து கொள்ளும் பொலிஸாருக்கு தண டனையில் இருந்து தப்பிக்க சந் தர்ப்பம் கிடையாது என பொலிஸ மாஅதிபர் என்.கே.இளங்க கோன் . தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றிய அவர் மேலும் தெரி விக்கையில்,.

கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் குறித்தும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் படும். 2013ஆம் ஆண்டு சிறப் பாகச செயற்பட்ட 367 பொலிஸ் உத்தியோகத்தர்களுக் கும் 14 சிவில் நபர்களுக்கும் சான்றித ழும் பரிசும் வழங்கப்படுகிறது.

இதற்கு 74,76 300 நிதி ஒதுக் கப்பட்டது

சரியாகக் கடமையைச் செய் யும் பொலிஸார் கௌரவிக் கப்படுவர். குற்றங்களைத் தடுத்து பயமின்றி மக்கள் வாழ வழி செய்ய தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# சிவசங்கரனார் ஆலயத்தில் பொங்கல் நாளன்று அதிசயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செல்லர் வீதியில் உள்ள ஸ்ரீ ஜமுனாம்பிகா சமேத சிவசங்கரனார் திருக்கோவிலில் தைப்பொங்கல் தினத்தன்று இரவு 10 மணியளவில் அதிசய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

பொங்கலன்று இரவு 10 மணி யளவில் ஆலய மூலஸ்தானக் கதவு தட்டும் சத்தம் கேட்ட துடன் திருக்கதவு மணிக ளும் ஒலிக்கத் தொடங்கின. இவ் ஆலயத்தில் காவலர்கள் நிய மிக்கப்பட்ட நிலையில் அவரகள் எழுந்து பார்த்தபோது ஆலய மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டி ருந்த மின்சார மேளம் தானாக இயங்கியது.

அத்துடன் அந்த ணர்கள் வேதம் ஓதும் சத்தமும் ஒலித்துக்கொண்டு இருந்தது.

இதனால் பயந்த காவலாளி கள் ஆலய பிரதான மணியை தொடர்ச்சியாக அடித்து அயலில உள்ள அடியார்கள் அனைவரை யும் ஒன்று திரட்டினர்.

இதனையடுத்து அடியவர்க ளும் அவ்விடம் விரைந்து வந்து நடந்த சம்பவத்தை பார்வையிடும் முயற்சியில் ஈடுபட்ட நிலையில் ஒருவர் ஆலயக் கதவின் துவா ரத்தின் ஊடாக பார்த்த போது மூலஸ்தானம் புகைமண்டலமாக காணப்பட்டது. மற்றைய அடி யார்களும் பார்த்த நிலையில் அவ்வாறு காணப்பட்டது.

எனினும் மூலஸ்தானக் கத வினை திறப்பதற்கு ஆலய தர்மகர்த்தாவும் இரு அடியார் களும் குருக்கள் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்து வந்தனர்.


இதன் பின்னர் நள்ளிரவு 12.30 மணியளவில் குருக்க ளால் கற்பூரம் கொழுத்தப்பட்டு ஆலயக் கதவு திறக்கப்பட்டது. அடியார்கள் வழிபாட்டை மேற் கொண்டனர்.

இவ்வாலயத்தின் கும்பாபி ஷேகம் நடைபெறவுள்ளதால் இவ வாறான அதிசயம் இடம்பெறு வது உண்மையானது என ஆல யக்குருக்கள் தெரிவித்தார்.


கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் உதயநகர் மாலைநேர வகுப்பு கட்டடத்தில் நடைபெற்ற பொங்கல்விழா.

(51)

# 3 இராணுவ ரொக்கெட்டுக்களை விண்ணில் செலுத்தியது நாசா



அமெரிக்க இராணுவத்தின் இரகசிய பயணங்களை உள்ளடக்கிய மூன்று ரொக்கெட்டுகளை நாசா நேற்று விண்ணில் ஏவியது.

டெர்ரியர்-ஒனியன் என்ற இந்த ரொக்கெட்டுகளை 20 விநாடி வித்தியாசத்தில், நேற்று அதிகாலை 4.09மணிக்கு தொடர்ச்சியாக விண்ணில் செலுத்தி நாசா சாதனை படைத்துள்ளது.

இரு அடுக்கு சுழற்சி கொண்ட இந்த ரொக்கெட்டுகள் 1315 கிலோ எடை கொண்டதாகவும், 91 கிலோ எடையுள்ள பொருளை 200 கி.மீ உயரத்திற்கு சுமக்கும் சக்தியும், 363 கிலோ எடையுள்ள வெடிபொருளை 80 கி.மீ உயரத்திற்கு சுமக்கும் சக்தியும் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

# துணை ஜனாதிபதி மீது பெண்கள் "மாவு" கொட்டி எதிர்ப்பு



கவுதமாலாவின் துணை ஜனாதிபதி மீது இரு பெண்கள் மாவு கொட்டி தங்களது எதிர்ப்பைக் காட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


மத்திய அமெரிக்காவில் உள்ள கீவுதமாலா நாட்டின் துணை ஜனாதிபதி ரோக்சானா தன் மாளிகையின் முன் குழந்தைகளின் சத்துணவு குறித்து உரையாற்றினார்.

அப்போது, அங்கிருந்த இரு பெண்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ரோக்சானாவின் மீது உலர் மாவை கொட்டினர்.

இதனால் அவர் மூச்சுதிணறல் ஏற்பட்டு அவதிக்குள்ளானதால், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச்சம்பவத்தில் கைதான இரு பெண்கள், 'எதிர்ப்புத் தெரிவிக்க எங்களுக்கு உரிமை உண்டு' என தாங்கள் செய்த செயலை நியாயப்படுத்துகின்றனர். மேலும் இவ்விரு பெண்களுடன் இவர்களுக்கு ஆதரவாக கோஷம் எழுப்பிய ஏனைய சிலரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# விவசாயிகள் கட்டிய "பணத்தாள்" சுவர்



உலகின் மிகப்பெரிய பணத்தாள்களால் ஆன சுவரை சீனாவில் விவசாயிகள் கட்டி எழுப்பியுள்ளனர்.

சீனாவின் மிகவும் ஏழ்மையான மாகாணங்களில் ஒன்றான சிட்சுவானில் லியாங்ஷான் விவசாயிகளின் கூட்டுறவு அமைப்பு ஒன்று செயற்படுகிறது. இந்த விவசாய சங்கம் சார்பாக காய்கறி தோட்டங்கள், பழப்பண்ணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சங்கத்தின் வருமானம் அருகிலுள்ள வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டின் மொத்த வருமானமான 22 இலட்சம் டொலர் மதிப்புடைய சீனப் பணக்கட்டுகளை அந்த வங்கியில் இருந்து பாதுகாப்புடன் எடுத்து வந்தனர்.

மாலையில் எடுத்து வரப்பட்ட அந்தப்பணத்தை, அங்குள்ள ஒரு கிராம அலுவலகத்தின் வெளியே சுவர் போன்று அடுக்கி வைத் தனர். 2 மீற்றர் நீளம், அரை மீற்றர் அகலத்திற்கு சுவரைப் போன்று அடுக்கி வைக்கப்பட்ட அந்தப் பணக்கட்டுகளை 7 காவலாளிகள் பாதுகாத்தனர். இரவு அந்தப் பணக்கட்டுகளின் மீது 3 காவலர்கள் படுத்து உறங்கினர். மறுநாள் காலை சங்க உறுப்பினர்களான 340 பேருக்கும் அந்தப் பணம் பிரித்து கொடுக்கப்பட்டது.

# தூதுவர்களின் பணியாட்களின் விபரங்களை பதிவது கட்டாயம்

## அமெரிக்கா அறிவிப்பு



வெளிநாட்டுத் தூதுவர்கள் வீட்டுப் பணியாட்கள் விபரங்களை பதிவதை கட்டாயமாக்கும் திட்ட அறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

பணிப் பெண்ணுக்கு வீசா பெற்றதில் போலி ஆவணங்களைக் கொடுத்து மோசடியில் ஈடுபட்டதாக இந்திய துணைத் தூதர் தேவ்யானி கோப்ரகடே மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இருப்பினும், அமெரிக்காவின் இந்த திடீர் நடவடிக்கைக்கு தேவ்யானி வழக்கு காரணமாக குறிப்பிடப்படவில்லை.

அமெரிக்காவில் பணியில் இருக்கும் வெளிநாட்டுத் தூதுவர்கள் வீட்டில் பணியாற்ற வருபவர்கள் அமெரிக்கா வந்திறங்கியவுடன் நேரில் சென்று குடியேற்று மையத்தில் தங்கள் விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என அந்த திட்ட அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

80 பக்கங்கள் கொண்ட இந்த திட்ட அறிக்கையில், V-3, [p-5 (A-3 , G-5) வீசா பெற்று பணிக்கு வரும் பணியாட்கள் உரிமைகளை பாதுகாக்க உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபை அதிகாரிகள், அலுவலர்கள், உலகவங்கி அதிகாரிகள், சர்வதேச நிதிய அதிகாரிகள் மற்றும் பல வெளிநாட்டு தூதரக அதிகாரிகளின் வீடுகளில் பணியாற்ற வருபவர்களுக்கு ஏ-3, ஜி-5 (A-3 , G-5) வகை வீசா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# லோக்சபா தேர்தலில் எவருடனும் கூட்டணி இல்லை



லோக்சபா தேர்தலில், காங்கிரஸ், பா.ஜ., உட்பட, எந்தக் கட்சியுடனும், பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி அமைக்கமாட்டாது. தேர்தலில், தனித்தே போட்டியிடும். சிறையில் இருக்க நேரிட்டாலும், தனித்துப் போட்டி என்ற நிலைப்பாட்டிலிருந்து மாறமாட்டேன், என, அந்தக் கட்சியின் தலைவர், மாயாவதி தெரிவித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் தலைவர், மாயாவதிக்கு, நேற்றுமுன்தினம் 58ஆவது பிறந்தநாள். இடம் பெற்றது இதையொட்டி, உத்தர பிரதேச மாநிலம், லக்னோவில், பிரமாண்டமான பொதுக்கூட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.

இந்தப் பொதுக்கூட்டத்தில், மாயாவதி மேலும் பேசுகையில்:

லோக்சபா தேர்தலை, பகுஜன் சமாஜ் கட்சி, நாடு முழுவதும், தனித்தே சந்திக்கும். பகுஜன் சமாஜ் - காங்கிரசுடன் கூட்டணி வைக்கப் போவதாக, செய்திகள் வெளியாகி வருகின்றன. அது தவறானது. ஆறு கோடி மக்கள் தொகையுடைய, குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருக்கும், நரேந்திர மோடி, அங்கு இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே நிகழ்ந்த, வன்முறையை கட்டுப்படுத்த தவறிவிட்டார்.

அப்படிப்பட்டவர், நாடு முழுவதும் உள்ள மக்களிடையே, எப்படி ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்? தேசிய அளவில், ஒரு கூட்டணி அமைப்பதற்காக, 2003இல், மத்தியில், ஆட்சியில் இருந்த; பா.ஜ., அரசு, சி.பி.ஐ., மூலம், எங்களை நிர்ப்பந்தம் செய்தது. எங்களுடன் கூட்டணி அமைத்தால், உத்தரப்பிரதேசத்தில் அதிக, லோக்சபா தொகுதிகளைப் பெற முடியும் அதன்மூலம், 15 முதல், 20 ஆண்டுகள், மத்தியில் பதவியில் நீடிக்கலாம் என்று கணக்குப்போட்டது.

ஆனால், அந்தக் கட்சியின் நிர்ப்பந்தங்களுக்கு, நான் அடிபணிய வில்லை. வாழ்நாள் முழுவதும், சிறையில் இருக்க நேரிட்டாலும், மதவாத சக்திகளுடன் கூட்டணி வைத்துக் கொள்வதில்லை என, அப்போதே முடிவு செய்து விட்டேன் அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறப் போவதில்லை என்றார்.

# தூதுவர்களின் துணைவிகளை கண்காணிக்கும் இந்தியா



தூதுவர்களின் துணைவியர்களை இந்திய அரசு கண்காணிக்க ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட விமான நிலைய நுழைவு சலுகையை இரத்துச் செய்த இந்தியா, தற்போது அந்நாட்டு தூதுவர்களின் துணைவியர்கள் டில்லி, மும்பை மற்றும் சென்னையிலுள்ள அமெரிக்க பாடசாலையில் பணிபுரியும் விபரங்களை வழங்குமாறு கேட்டுள்ளது.

ஆனால் இதுவரை இத்தகவலை அந்நாட்டு அரசு வழங்கவில்லை.

பாடசாலையில் பணியாற்றும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரிச்சலுகைகளை இரத்துச் செய்யும் முடிவு காரணமாகவே இவ்விபரம் கேட்கப்படுவதாக அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவர் ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவு துறை செயலாளரான வில்லியம் பர்ன்சிடம் தெரிவித்துள்ளார்.

# பதவியிலிருந்து விலகமாட்டேன்; தாய்லாந்து பிரதமர் மீண்டும் வலியுறுத்து



பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை என தாய்லாந்து பிரதமர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தாய்லாந்தில் இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களை அடுத்து பிரதமர் யிங்லக் ஷினவத்ரா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இந்த வார ஆரம்பத்தில் தாய்லாந்து தலைநகரை முற்றுக்கையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் எவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், தாம் பதவி விலகப் போவதில்லை என ஷினவத்ரா தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்று வரும் நிலையில், அடுத்த மாதம் இரண்டாம் திகதி தேர்தல் நடைபெறுவதில் சந்தேகம் நிலவுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 7 அம்சக் கோரிக்கையை முன்வைத்து சிற்றூழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை ஊழியர் சங்கம் 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் அரைநாள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம் அரச வைத்தியசாலைகளில் முன்னெடுத்துவரும் இத்தகைய பணிப் புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் இந்தப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய நான்கு மாடிக் கட்டடத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய சிற்றூழியர்கள் தமது கோரிக்கைகள் குறித்த சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பின்னர் தமது கோரிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றையும் விநியோகித்த அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் பயன்படுத்தும் நுழைவாயில் ஊடாக வைத்திய சாலைக்கு ஊர்வலமாக வெளியேறி வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு நுழைவாயில் ஊடாக வைத்தியசாலை வளாகத்தை வந்தடைந்து தமது பணிப் புறக்கணிப்பை முடித்துக் கொண்டனர்.

இதேவேளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் சிற்றூழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். காலை 8.30 மணியிலிருந்து 12.00 மணி வரை இப்போராட்டம் நீடித்தது. நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்ற இப்போராட்டம் யாழ்.குடாநாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

(பா,இ,11)

## யாழ்.வருகிறார்...

அதன் ஏற்பாட்டாளர் நாதன் சிவகணநாதன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இது போன்ற வைத்திய சாலையை நாம் உருவாக்குவோம் என்று நினைக்கவில்லை. எமது நிதி திரட்டலில் கிரிக்கெட் வீரர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களின் பேருதவி மூலம் இவ்வைத்தியசாலையை உருவாக்கியுள்ளோம்.

இதன்பயன்பாடு வடக்கு மக்களுக்கு கிடைக்குமானால் புற்று நோயால பீடிக்கப்பட்டவர்கள் மகரகம வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்காது. அத்துடன் இதில் கொண்டு வரப்படும் கதிரியக்கத் தொழில்நுட்பத்திலும் நுண்ணியமான கதிர்வீச்சு முறையை உரு வாக்குவதற்கான புதிய கதிரியக்கப் பிரிவுக்கு ஜனாதிபதி அடிக்கல் நாட்டுகின்றார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இப்பிரிவின் சேவை மக்களுக்கு கிடைக்கும் என்றார். இக்கட்டடத்துக்கான செங்கட்டிகளை வழங்கி உதவிகள் புரிந்தவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனங்களின் இலட்சினைகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

நான்கு விடுதிகளைக் கொண்ட இப்பிரிவில் 120 படுக்கைகளும், வெளிநோயாளர் பிரிவு, சிறுவர் விடுதி, பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி, சிறுவர் விளையாட்டிடம் என அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆரம்ப நிகழ்வில், ஜனாதிபதி கலந்து கொள்வதுடன், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண முதலமைச்சர், வடமாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் வடமாகாண சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன், தெல்லிப்பழை வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் உமாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ)

## சட்டத்தரணிகள்...

பதற்கான சிவில் சமூக முன்முயற்சிகள் எனத் தலைப்பிடப்பட்ட திட்டத்திற்கு யு.எஸ்.எயிட் அனுசரணை அளிக்கவுள்ளது.

இந்த மூன்று வருடகால நிகழ்ச்சித்திட்டம், இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கங்களுக்கு இடையிலான உறவை மேலும் மேம்படுத்த வழிகோலும்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது தொழில்சார் மட்டத்திலான சட்டக்கல்வி மற்றும் நீதித்துறை மட்டத்திலான கல்வியை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் சட்ட உதவி சேவைகளை வலுப்படுத்துவதற்கும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆய்வு மற்றும் வாதிடல் வகிபாகத்தை பலப்படுத்துவதற்கும் உதவியாக அமையும்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற இலங்கை நீதித்துறையின் முக்கிய பங்காளருக்கு உதவக்கிடைத்தமை குறித்து நான் மிகவும் மகிழ்ச் சியடைகின்றேன். ஜனநாயக நிறுவனங்களைப் பலப்படுத்துகின்ற, சட்டத்தின் ஆட்சிக்கு உதவுகின்ற மற்றும் சுயாதீன நீதித்துறையை ஊக்குவிக்கின்ற சிவில் சமூகத்துடனான நீண்டகால இணைச்செயற்பாட்டை தொடர்வதில் நாம் பெருமையடைகின்றோம்.

இந்த வகையில் இலங்கையில் நீதித்துறையின் செயற்திறனை மேம்படுத்துவதிலும் நீதியை நிர்வகிப்பதிலும் நாம் மேலும் உதவ முடியும் என கைச்சாத்திடல் நிகழ்ச்சியின் போது அமெரிக்க தூதுவர் சிஸன் தெரிவித்தார்.

இதற்கு மேலாக இந்த மானியத்தின் ஊடாக சட்ட நூலகமொன்றை சீரமைக்கவும், சட்டத்தரணிகள் சங்க' கேட்போர் கூடத்தை புதுப்பிப்பதற்கும் மற்றும் 2014 பெப்ரவரி மாதத்தில் தொழில் சட்டம் குறித்த கருத தரங்கொன்றை ஏற்பாடுசெய்வதற்கும் உதவியளிக்கப்படும் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய...

இலங்கை-இந்திய சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களில் 103 பேர் பரிமாற்றப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

காங்கேசன்துறையிலுள்ள சர்வதேச கடல் எல்லையில் வைத்தே இவர்கள் பரிமாற்றப்பட்டனர். இலங்கை மீனவர்கள் 52 பேரும், இந்திய மீனவர்கள் 51 பேருமே இவ்வாறு பரிமாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாடிக்கையாளர் சேவை ஞாயிறு வரை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது சனிக்கிழமைகளிலும் திறக்கப்படும் மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரைக்கும் வாடிக்கையாளர்களுக்காகத் திறக்கப்படும் என மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## நேற்றும்...

இருந்து இதுவரை 36 மனித, எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்திய ரெட்ண தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் கடந்த 7ஆம் திகதி வரை ஆறு தடவைகள் மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது.

அவற்றில் சில மனித எலும்புக் கூடுகள் துண்டு துண்டுகளாகவும் மீட்கப்பட்டன. இந்த நிலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மீண்டும் நேற்று நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண ஆகியோர் முன்னிலையில் 7 ஆவது தடவையாக மனிதப் புதை குழி தோண்டப்பட்டது.

இதன்போது புதிதாக மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. நேற்று மீட்கப்பட்ட எழும்புக்கூடுகளில் ஒரு மண்டை யோட்டின் வாய் முழுமையாக திறந்திருந் தமையினை காணக்கூடியதாக இருந்தது. குறித்த மண்டையோட்டின் வாய்ப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ள அடையாளங்களும் காணப்பட்டன. மீண்டும் இன்றுபுதைகுழி தோண்டும் பணி இடம்பெறவுள்ளது.

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உலருணவு வழங்க வேண்டும்

## வலியுறுத்தி தம்பிராசா உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுக் கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து க.மு. தம்பிராசா யாழ்.செயலகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான மகஜர் ஒன்றை வழங்கிவிட்டு அவர் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்திற்கு முன்பாக தமது கோரிக்கை குறித்த சுலோக அட்டைகளை வைத்து அதன் முன்பாக அமர்ந்தவாறு அவர் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

இவர் தனது தலைமையின் கீழ் சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான அமைப்பு என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கி இவ்வாறு மக்கள் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்து செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(பா)

## சாட்சியங்களை...

ஜுலியானா ஏ ஸ்பவன் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பலதரப்பட்டவர்களுடனும், அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பரந்துபட்டளவில் தொடர்ச்சியான சந்திப்புகளை மேற்கொள்கின்றனர்.

நாம் அந்தச் சந்திப்புகளை வகைப்படுத்துவதில்லை. தூதுவர் ஸ்டீபன் ராப்பின் அறிக்கை அவரது சார்பிலானது.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மோசமான மனிதஉரிமை மீறல்கள் மற்றும் அனைத்துலக மனிதாபிமான சட்டமீறல்கள் குறித்த சாட்சியங்களை நேரில் சந்தித்து விபரங்களை பெறும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

சுதந்திரமான - நம்பகமான விசாரணைகளின் மூலம் கொழும்பு உண்மையை கண்டு பிடித்து, சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவுக்கு தகவல் தெரிவித் தவர்களின் அடிப்படையில், அமெரிக்கா சாட்சிகளிடம் தகவல் திரட்டியதா என்று அவரிடம் கேள்வி எழுப்பியதற்கு, அவ்வாறு தம்மால் வகைப்படுத்திக் கூறமுடியாது என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புற்றுநோயின்...

பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புதிய புற்றுநோய் வைத்தியசாலை தொடக்க விழா குறித்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னரான பதிவுகளின்படி யாழ்.குடாநாட்டில் புற்றுநோயின் தாக்கம் வெகுவாக அதிகரித்திருப்பது புலனாகின்றது.

குடாநாட்டில் உள்ள விவசாயச் செய்கையில் பயன்படுத்தப்படும் செறிவான கிருமிநாசினி, செயற்கை உர வகைகளின் பயன்பாடு மற்றும் நிலத்தடி நீர் மாசடைவதினாலும் புற்றுநோய் பரம்பல் வெகுவாக அதிகரித்திருப்பது புலனாகின்றது.

இதனைச் சுகாதார பிரிவினரால் தனியே கட்டுப்படுத்த முடியாது. துறைசார்ந்தவர்களும் இதற்குப் பொறுப்பானவர்களும் முயற்சி எடுத்து இதனைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மின் பாவனையாளர்கள்...

கல்லை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், பெயர்ப் பலகையினை பிரதிப் பொது முகாமையாளர் யு.கே.டபிள்யு சில்வாவும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

தொடர்ந்து புதிய கட்டடத்தை அமைச்சர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

மண்டபத்தில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து மதத் தலைவர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் குணதிலக, இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகா மையாளரும், மின் பொறியியலாளருமான யு.கே.டபிள்யு சில்வா ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்த்தினார்.

12 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்நிலையத்தின் ஊடாக வடமராட்சிப் பகுதியின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது, நல்லை ஆதின குருமுதல்வர், இலங்கை மின்சார சபையின் யாழ்.மாவட்ட மின்பொறியியலாளர் ஞான கணேசன், பிரதேச செயலர்களான ஜெயசீலன், திருலிங்கநாதன், சிவசிறி, ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் உள்ளிட்ட இலங்கை மின்சார சபையின் மின் பொறியியலாளர்கள், மின் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்புடன்...

சாளர். இலங்கையுடன் மனித உரிமைகள் விடயத்தில் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆவலாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்தநிலையில் இலங்கையில் ஏதாவது முன்னேற்றங்கள் உள்ளனவா என்பது குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தகவலை அறிய ஆவலாக உள்ளோம். அதை அறிந்த பின்னரே அந்தக் கோரிக்கை குறித்து ஆராயலாம் என்று மாரி ஹாப் தெரிவித்தார்.

சகல தரப்பினருடனும் இணைந்து நாட்டில் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அமெரிக்கத் தூதரகமும் ஏற்கனவே அறிவித்துள்ளது.

நல்லிணக்க முனைப்புக்களில் அனைத்து தரப்பினரும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாகாண நிர்வாக அதிகாரிகளுடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் எதிர் காலத்தில் முன்னெடுக்கப் படவுள்ள அபிவிருத்தித்திட் டங்கள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் விக் னேஸ்வரன் மாகாண நிர்வாக அதிகாரிகளைச் சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.



யாழ். சோமசுந்தர அவனியு வீதியில் நேற்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட உள்ளூரா ட்சி அமைச்சின் அலுவலகத்தில் முதலமைச்சர் தனது பணிகளை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது மாகாண அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஆளுநரின் செயலாளர் உள் ளிட்ட திணைக்களத் தலைவர் கள், அரச உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.

இதன் போது மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங் கள் தொடர்பாகவும் மாகாண நிர்வாகச்செயற்பாடுகள் தொடர் பிலும் விரிவாக கலந்துரையாடப பட்டுள்ளது.

# வேட்புமனுக்கள் ஏற்பு ஜனவரி 30 ஆம் திகதி முதல்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக் கள் இம்மாதம் 30 திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித் துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் எதிர் வரும் பெப்ரவரி ஆறாம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறை வடையவுள்ளன. இது தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படவுள்ள தாக, தேர்தல்கள் ஆணையா ளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரையில் குறித்த இரண்டு மாகாணசபைத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகளும், சுயாதீனக் குழுக்களும் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என தேர்தல் செயல கம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேர் தலுக்கான திகதி அறிவிக்கப்பட வுள்ளது. மேல் மற்றும் தென் மாகாண சபைகள் கடந்த 12 ஆம் திகதி கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி; பிரேசிலுடன் உடன்படிக்கை

இலங்கை பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்க பிரேஸில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜ பக்ஷவிற்கும், பிரேஸில் பாது காப்பு அமைச்சர் செல்சோ அமோரினுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது பிரேஸிலுக்கு விஜயம் செய்துள்ள பாதுகாப் புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ அந்நாட்டுப் பாது காப்பு அமைச்சரை தலைநகர் பிரேஸிலியாவில் சந்தித்துள் ளார். இராணுவப் பயிற்சி அளிப்பது தொடர்பில் உடன் படிக்கை ஒன்றும் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறையில் கைத் தொழில் மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இணக் கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப் படவுள்ளது.


# அடிக்கடி தடைப்படும் மின்சாரம்; தென்மராட்சி மக்கள் சிரமம்

(சாவகச்சேரி)


தென்மராட்சியின் பல பகுதிகளிலும் மின் விநியோகத்தில் சீரின்மை ஏற்பட்டுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

லக்ஷபானா மின்விநியோகத்தின் பின்னர் ஒரே சீரான மின் விநியோகம் இருந்துள்ளது. அண்மைக்காலமாக மின் விநியோகத்தில் வரும் மின்சாரத்தின் அளவு கூடிக்குறைவதால் 'ரீயூப் லைற்கள்' ஒளிர மறுப்பதாகவும், சில மின் உபகரணங்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

இது குறித்து மின்சார சபையினருக்கு முறையிட்டும் பலன் ஏதும் இல்லை என மக்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். (இ)



பொலிகண்டி காளி அம்மன் ஆலயத்தில் இன்றைய தைப்பூச திருவிழாவையொட்டி நேற்றைய தினம் சம்பிரதாய முறைப்படி புதிர் எடுக்கப்பட்டு ஆலய முன்றலில் வைத்து அரிசி குற்றும் போது... (116)



மிருசுவில் - உசன் சந்திக்கு அண்மையில் நேற்று இரவு 7 மணிக்கு இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும், ஜீப் வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதைக் காணலாம். (21)

# வடக்கின் ஆயர்களை உடன் கைது செய்யுங்கள்

## இராவணாபலய அமைப்பு கோரிக்கை

இறுதிக்கட்ட யுத்தத்தில், அரசாங்கம் போர்க் குற்றங்கள் மேற்கொண்டதாக அமெரிக்கா வின் விசேட தூதுவர் ஸ்டீபன் ஜே.ரொப் உள்ளிட்ட அமெரிக்க பிரதிநிதிகளிடம் பொய்யான தகவல்களை மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்கள் வழங் கியுள்ளனர். எனவே அவர்கள் இருவரையும் உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபரிடம் இராவணாபலய அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாத ஜெனிவா செயலமர்வை இல க்கு வைத்து, கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தின் போர்க் குற்ற விவகாரங்களைக்கையா ளும் தூதுவர் ஸ்டீபன். ரொப், யாழ்., மன்னார் ஆயர்களுடன் விசேட சந்திப்பையும் கலந் துரையாடல்களையும் மேற் கொண்ட போது, பொய்யான தகவல்களை வழங்கியுள்ளனர் என்றும், இராவணா பலய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு எதிராக போர்க் குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஸ்டீபர் ரொப் வெளியிட்ட கரு த்தை நாம் மிகவும் கடுமையா கக் கண்டிக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ள இராவணா பலய,

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகி யோர் வழங்கிய பொய்யான தகவல்களின் அடிப்படையி லேயே ஸ்டீபன் ரொப் த[illegible] கருத்தை வெளியிட்டுள்ளார் என்றும் அவ்வமைப்பு தெரி வித்துள்ளது.

எனவே, மேற்படி ஆயர்கள் இருவரையும் கைது செய்ய பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராவணா பலய அமைப்பின் பொதுச் செயலா ளர் வணக்கத்துக்குரிய இத்த கந்தே சத்தாதிஸ்த தேரர் வலி யுறுத்தியுள்ளார்.

# லண்டன் இரட்டைக்கொலை; கசிகிறது அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

லண்டன் ஹரோ Woodgrange Close பகுதியில் அண் மையில் இடம்பெற்ற இரண்டு குழந்தைகளின் இரட்டைக் கொலை குறித்த பிரேதபரி சோதனை அறிக்கை இப்போது வெளியாகி உள்ளது.

இந்த மரணங்கள் மூச்சுத் திணறலால் ஏற்பட்டது என்ப தும், அவர்களின் தாயினால் கொலை செய்யப்பட்டு உள்ள மையும் பிரேத் பரிசோதனை யில் உறுதியாகியுள்ளதாக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார தெரிவித்துள்ளனர். இதனை லண்டன் ஈவினிங் ஸ்ரான்ட்டட் பத்திரிகை நேற்றைய பதிப்பில் வெளியிட்டுள்ளது.

வாகேஸ்வரன் ஜெயவாணி தம்பதிகளின் பிள்ளைகளான, 5 வயதான அனோபனும், 7 மாதங்களான நதீபனும் பேரன்ற் Brent வீட்டில் கொல்லப்பட்ட நிலையில், சடலங்களாக மீட்கப்பட்டனர். இவர்களது சடலங்களுக்கு அருகில் இருந்த 33 வயதுடைய தாய் ஜெயவா ணியின் சடலமும் மீட்கப்பட்டது.

ஜெயவாணியின் மரணமும் கழுத்து நெரிவின் காரணமாக ஏற்பட்டது எனவும் வேறு எவரும் கொலை செய்ததாக தம்மால் சந்தேகப்படவில்லை எனவும் ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் அவரது பிள்ளை களின் மரணங்கள் கொலை என்ற கோணத்திலேயே பார்க் கப்படுவதாக தெரிவித்தனர்.

இந்த வகையில் மூவரது மரணங்கள் குறித்து முறைப்படி. பிரேத பரிசோதனைகள் மூலம் அடையாளம் காணப்பட்டதாக வும் பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர்.

பிள்ளைகளின் தந்தையும் ஜெயவாணியின் கணவருமான வாகேஸ்வரன் Woodgrange Close இல்லத்திலேயே தனது கணக்கியல் நிறுவனத்தை பதிவு செய்து நடத்தி வந்துள்ளார்.

அவர் வெளியில் சென்று வீடு திரும்பிய போது மாலை 5.20 மணியளவில் மனைவியும் குழந்தைகளும் மரணித்து சட லங்களாக கிடப்பதாக பொலி ஸாருக்கு தகவல் தெரிவித் ததனை அடுத்து அவர்களின் சடலங்களை பொலிஸார் மீட் டுள்ளனர். என்பது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையில் கொலைகளிற்கான காரணம் மிகத்தெளிவாக புலப்படுவதாக ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.


யாழ். வர்த்தக கண்காட்சியில் 83B இலக்க காட்சியறையில் ...

K7™ TOTAL SECURITY
VERSION FREE

ஜப்பானில் முதலிடத்தைப் பெற்ற
வைரஸ் காட்
இப்பொழுது இலங்கையிலும்



NALIN Information Technologies (Pvt) Ltd.
195/4, PARAMESWARA JUNCTION, PALALY ROAD. (C/2599)
T.P: 0094 212221166, 0094 777667974 | E-MAIL:NALIN@NIT.LK


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.